வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 04 15.05.2023 திங்கட்கிழமை இதழ் : 157 பக்கங்கள் : 16




# படைகளின் பிரசன்னத்துடன் யாழ். பல்கலையில் வெசாக்!

யாழ்ப்பாணம், மே 15

சிவில் உடை தரித்த இராணுவத்தின் பங்களிப்புடன் பிக்கு ஒருவரின் பிரசன்னத்துடன் யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட வளாகத்தில் மிகப்பெரியளவில் வெசாக் கொண்டா



டப்பட்டது.

மருத்துவபீட வளாகத்துக்கு நேற்று முன்தினம் சென்ற 10இற்கும் மேற்பட்ட சிவில் உடை தரித்த இராணுவத்தினர் மேடை அமைத்தல், அலங்கார வேலைகளில் ஈடுபட்டிருந்தனர்.

15

## பிரதமர் பதவி விவகாரத்தால் பஸில் – யோசித முரண்பாடு!

கொழும்பு, மே 15

பிரதமர் பதவி போட்டியால் பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் பஸில் ராஜபக்ஷவும் மகிந்த ராஜபக்ஷவின் புதல்வர்களில் ஒருவரான யோசிதவும் கடுமையாக தர்க்கித்து முரண்பட்டனர் என்று தென்னிலங்கை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் முழுவதும் பஸிலுக்கும் யோசித வுக்கும் இடையில் பெரும் கருத்து வேறுபாடு நிலவியது.

15

## ‘குமுதினி’ படகு படுகொலை 38ஆவது நினைவேந்தல் இன்று

யாழ்ப்பாணம், மே 15

குமுதினி படகு படுகொலையின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்றாகும். இதையொட்டிய நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு குமுதினி படுகொலை நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 8 .15 மணியளவில் நெடுந்தீவு - மாவிலி துறைமுகத்தில் அமைந்துள்ள புனித சவேரியார் ஆலயத்தில் ஆத்ம சாந்தி வேண்டி திருப்பலியும் சம நேரத்தில் மாவிலி துறைமுகத்தில் அமைந்துள்ள வீரபத்திர பிள்ளையார் ஆலயத்தில் ஆத்ம சாந்தி வேண்டி சிறப்பு பூசை யும் நடைபெறவுள்ளன.

15

# விலக மறுக்கும் ஆளுநர்களின் கொடுப்பனவை நிறுத்த உத்தரவு?

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்தார்

கொழும்பு, மே 15

**ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய பதவி விலக மறுக்கும் நான்கு ஆளுநர்கள், அவர்களின் ஆளணியின் சகல கொடுப்பனவு களை நிறுத்துமாறு தனது செயலாளர் சமன் ஏகநாயக்கவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளார் என்று செயலக வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.**

பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான நான்கு ஆளுநர்களே இவ்வாறு மாற்றப்படுகின்றனர். இந்த அடிப்படையில் வடக்கின் ஜீவன் தியாகராசா, கிழக்கின் அநுராதா யஹம்பத், மேல் மாகாணத்தின் வசந்த கரன்னகொட, சப்ரகமுவவின் டிக்கிரி கொப்பேகடுவ ஆகியோரை நீக்கிவிட்டு அவர்களுக்கு பதிலாக புதியவர்களை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

ஆனால், இந்த

15

## இலங்கை – இந்தியா கடல்வழி மின் விநியோக ஒப்பந்தம் தயார்!

### கொள்கை ரீதியில் உடன்படிக்கை

கொழும்பு, மே 15

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே மின்சாரத்தை கொண்டு வருவதற்கான உடன்படிக்கை கொள்கை ரீதியில் எட்டப்பட்டுள்ளது என்று அறிய வருகின்றது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மின்சாரத்தை கடத்துவதற்கு பயன்படுத்தப்படும் சிறப்பு மின் கேபிளை அமைக்க இந்திய - இலங்கை அதிகாரிகள் உடன்படிக்கைக்கு வந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சூழவுள்ள கடற்பரப்பில் இந்திய - இலங்கை எல்லைகளை பிரிக்கும் மணல்பரப்பின் ஊடாக இந்த மின்சார கேபிளை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரி விக்கின்றன.

இது தவிர,

15

## கொழும்பில் பாதுகாப்பு இறுக்கம்!

கொழும்பு, மே 15

கொழும்பு நகரம் மற்றும் புறநகர் பகுதிகளின் பாதுகாப்புக்காக நேற்று படையினர் குவிக்கப்பட்டிருந்

15

## கொள்கை வகுப்புக்கு தனியாக ஓர் ஆணையம்!

கொழும்பு, மே 15

தேசிய கொள்கை ஆணையம் என்ற புதிய ஆணைக்குழுவை உருவாக்க அரச முடிவு செய்துள்ளதாக அரச உயர் வட்டாரங்கள் மேற்கோள் காட்டி தகவல்கள் வெளிவருகின்றன.

இந்த ஆணைக்குழுவில் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், நிதியமைச்சர் மற்றும் சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 12 உறுப்பினர்கள் உள்ளிட்ட இரண்டு அதிகாரபூர்வ உறுப்பினர்கள் இருப்பார்கள்.

மொத்தம் 21 உறுப்பினர்களைக் கொண்ட தேசியக் கொள்கை ஆணையத்தின் முதன்மை பங்கு தேசிய கொள்கைகளை உருவாக்குதல் - திட்டமிடுதல் மற்றும் கண்காணிப்பது ஆகும்.

25 வருடங்களை பிரதிபலிக்கும் ஒரு தேசிய கொள்கை கட்டமைப்பின் மூலம் இலங்கையை நிலையான அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதற்கு தேவையான ஏற்பா

15

## ஜனாதிபதி தமிழ் எம்.பிக்கள் இன்று பேச்சு!

கொழும்பு, மே 15

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வடக்கு - கிழக்கு தமிழ் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

மாலை 5.30 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் இந்தப் பேச்சில் இனப் பிரச்சனை தீர்வுக்காக அதிகாரப்

15

## திருமலையில் தடையை மீறி பௌத்த நிகழ்வு முன்னெடுப்பு

11

## அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை போர் நோக்கில் சீனா பயன்படுத்தாது!

### அமைச்சர் நிமால் சொல்கிறார்

கொழும்பு, மே 15

அம்பாந்தோட்டை துறைமுகத்தை போர் அல்லது பாதுகாப்பு நோக்கங்களுக்காக சீனாவால் பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்துள்ளதாக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பாதுகாப்பு குறித்து கவனமாக இருக்க வேண்டும்

15



## தேர்தலை நடத்தும் அதிகாரத்தை ரணிலுக்கு வழங்க சட்டத் திருத்தம்!

கொழும்பு, மே 15

ஜனாதிபதி தேர்தலை நடத்த ஜனாதிபதி ரணிலுக்கு அதிகாரம் வழங்கும் வகையில் அரசமைப்பில் திருத்தம் கொண்டு வர அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று அறிய வருகின்றது.

கொழும்பின் உயர் அரசியல் வட்டார தகவல்களின்படி,

தற்போதைய அரசமைப்பு விதிகளின்படி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி தனது பதவிக் காலத்தில் 4 ஆண்டுகள் நிறைவடைந்த பின்னர் மீண்டும் ஜனாதிபதி தேர்தலை நடத்த விருப்பம் தெரிவிக்க முடியும்.

ஆனால், அரசமைப்பு நிபுணர்க

15

# இப்படியும் நடக்கிறது...!

நாட்டில் நடக்கும் பல விடயங்கள் குறித்து உடனுக்குடன் அந்தந்த துறைசார் புத்திஜீவிகளிடம் கருத்துக் கேட்டால் எதுவும் சொல்ல மாட்டார்கள்.

முடிந்துபோன வாரத்தில் நடந்த ஏதாவது ஒரு விடயம் குறித்து ஞாயிற்றுக்கிழமை கேட்டால் விலாவாரியாக கருத்துச் சொல்வார்கள்.

அதற்கு வேறு எதுவும் காரணமல்ல. ஞாயிற்றுக்கிழமை வெளியாகும் பத்திரிகைகளில் மற்றவர்கள் அதுபற்றி எப்படி அலசுகிறார்கள் என்று பார்த்து விட்டுத்தான் அவர்கள் தமது கருத்தைச் சொல்வார்கள்.

அப்படி நமது புத்திஜீவிகள் காத்திருந்து படிக்கின்ற ஞாயிறு பத்திரிகைகளில் ‘சண்டே ரைம்ஸ்’ பத்திரிகையும் ஒன்று.

நேற்றைய தினம் அந்தப் பத்திரிகையை படித்துவிட்டு லண்டனிலிருந்து ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினர். வழக்கமாகவே வாரம் ஒரு தடவையாவது தவறாமல் நாட்டு நடப்புகளை அலசுகின்றவர்தான் அந்த நண்பர்.

அவர் கேட்டார், “இன்றைய சண்டே ரைம்ஸ் அரசியல் பத்தியில் நமது தமிழ் எம். பிக்களின் ஜனாதிபதியுடனான பேச்சுகள் பற்றிய குறிப்பைப் படித்தீர்களா? அந்தப் பேச்சு தொடர்பாக ஒருசில பந்திகளிலேயே அதை எழுதியவர் அப்படியே அங்கு என்ன நடந்தது என்பதை நமக்கு சொல்லியிருக்கிறார்.

அங்கு சித்தார்த்தன் ஐந்து விடயங்களை சுட்டிக்காட்டினார் என்று எழுதியிருக்கிறார்கள் - படித்துப் பாருங்கள்”, என்றார் நண்பர்.

எனக்கோ ஆச்சரியம்! ‘இதுபோன்ற பேச்சுகளில், வேறு ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு, அவர் அப்படிச் சொன்னார், இப்படிச் சொன்னார் என்று பத்திரிகைகள் எழுதுவதுதானே வழமை. அது என்ன சித்தார்த்தன் கூறியது பற்றி எழுதியிருக்கிறார்கள்?”, என்றேன்.

அதற்கு அவர் சொன்னார், ‘அப்பிடியல்ல, அவர்கள் எப்போதுமே ஒரு சம்பவத்தைப் பற்றி எழுதுவதென்றால் அதிலுள்ள மிக முக்கியமான ஒருசில விடயத்தைத்தான் சுருக்கமாக ஆனால், கச்சிதமாக சொல்வார்கள். நான் நினைக்கின்றேன், அன்றைய பேச்சில் சித்தார்த்தன் ஒருவர்தான் சரியானதை, சரியாக, சரியான நேரத்தில் சொல்லியிருக்கிறார்”, என்றார் அவர்.

கடந்த வாரம் நடந்த தமிழ் எம்.பிக்களுடனான அந்தப் பேச்சு பற்றி அந்தப் பத்தியில் எழுதப்பட்டிருந்த விடயங்களை கீழே தருகின்றேன்:

“ஒரு மணித்தியாலமும் 50 நிமிடங்களும் நீடித்த இந்த முதல் நாள் பேச்சில் பெரும்பாலான உரையாடல், ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுமந்திரனுக்கும் இடையில் இடம்பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன், 90 வயதை எட்டவுள்ள நிலையில்,

பிரச்னைகளுக்கு விரைந்து தீர்வு காண்பது அவசியம் என்று அறிவித்தார்.

இறுதியில் குறுக்கிட்ட தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி., தென்னாபிரிக்கர்கள், அரசியல் ரீதியாக முன்னோக்கி செல்லும் வழி ஒன்றுக்கான இணக்கப்பாட்டைக் கண்ட பின்னரே, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்கினார்கள். எஞ்சியுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும், காணி சுவீகரிப்பு நிறுத்தப்பட வேண்டும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கு தேர்தல் நடத்தும் திகதியில் உறுதியளிக்க வேண்டும், போரின் நேரடித் தாக்கத்துக்கு உள்ளானவை என்ற அடிப்படையில் இந்த இரண்டு மாகாணங்களுக்கும் சிறப்பு பொருளாதார அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை தமிழ் தலைமைகள் ஏற்கெனவே முன்வைத்துள்ளன என்று சித்தார்த்தன் அங்கு வாதிட்டார்.

மேலும், ஐந்து கோரிக்கைகள் இந்த ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற பேச்சின்போது ஜனாதிபதியிடம் தம்மால் முன்வைக்கப்பட்டது என்பதையும் அவர் அங்கு நினைவூட்டினார்.

அவர் நினைவூட்டிய அந்த ஐந்து கோரிக்கைகள்:

1. தேசிய காணி ஆணைக்குழுவை நியமித்து, விரிவான காணிக் கொள்கையை வகுக்க வேண்டும்.

2. அரசமைப்பு சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி ஒரு மாகாண பொலிஸை அமைக்க வேண்டும்.

3. (அ) மாகாண சபைகள் சட்டம், (ஆ) மாகாண சபைகள் (தொடர்ச்சியான ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் (இ) அதிகாரங்களை கைமாற்றுதல் (பிரதேச செயலாளர்கள்) சட்டம் என்பவற்றில் தேவையான திருத்தங்களை ஏற்படுத்த வேண்டும்.

4. மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டு, மீண்டும் மத்திய அரசுக்குப் பறித்தெடுத்தெடுக்கப்பட்ட அனைத்து அதிகாரங்களையும் (தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டம், கமநல சேவைகள் சட்டம், திவிநெகும சட்டம் உட்பட) மீண்டும் மாகாண சபைகளுக்கு வழங்கும் வகையில் சட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

5. தேசிய பாடசாலைகள் என்ற கருத்தை ஒழித்து, இப்போது மத்திய நிர்வாகத்தின் கீழ் வரும் அனைத்து பாடசாலைகள் மற்றும் மருத்துவ மனைகளை மாகாணங்களுக்கு மாற்ற வேண்டும்.

இவையே அந்த ஐந்து கோரிக்கைகள். சித்தார்த்தன், எம். பி. தனது கருத்தை கூறி முடித்த பின்பு, பேச்சு கூட்டத்தை நிறைவு செய்வதற்கு சில நிமிடங்கள் முன்னதாக - அங்கே பங்கேற்றிருந்த பல்வேறு அரச திணைக்களங்களின் தலைவர்களையும் நோக்கித் திரும்பி - வடக்கு மற்றும் கிழக்கில் காணி தொடர்பாகச் செயல்படுத்தப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் மறு அறிவித்தல் வரை உடன் நிறுத்துமாறு உத்தரவிட்டார் ஜனாதிபதி.

இதுவே அந்தப் பேச்சுத் தொடர்பாக மேற்படி ‘சண்டே ரைம்ஸ்’ பத்தியில் நேற்று வெளிவந்த தகவல். இதனை எதற்காக இங்கே தந்திருக்கிறேன் என்பதை வாசகர்கள் புரிந்துகொள்

- ஊர்க்குருவி

# வடக்கு பாடசாலைகளில் சத்துணவு வழங்கும் திட்டத்தில் முறைகேடுகள்!

## விசாரணைகள் நடக்கின்றன என்கிறார் அமைச்சின் செயலர்

**யாழ்ப்பாணம், மே 15**

**வடக்கு பாடசாலைகளில் வழங்கப்படுகின்ற சத்துணவு திட்டத்தில் முறைகேடுகள் இடம்பெறுகின்றன என்று வட மாகாண கல்வி அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன அதன் செயலாளர் அ. உமாமகேஸ்வரன் தெரிவித்தார்.**

வடக்கு மாகாண பாடசாலைகளில் மதிய நேர சத்துணவு திட்டத்தில் முறைகேடுகள் இடம்பெறுகின்றன என்று குற்றச்சாட்டுக்கள் எழும் நிலையில் அவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், அரசாங்கத்தால் பாடசாலை மாணவர்களுக்காக வழங்கப்படும் மதிய நேர சத்துணவு திட்டத்தில் சில பாடசாலைகளில் முறைகேடுகள் இடம்பெறுவது தொடர்பில் எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

தீவக வலயப் பாடசாலை ஒன்றில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சத்துணவு திட்டத்தில் முறைகேடு இடம்பெற்றமை தொடர்பில் ஆதாரங்களுடன் எமக்கு முறைப்பாடு கிடைத்தது. குறித்த பாடசாலையின் அதிபர் மாணவர்களுக்காக வழங்கப்படும் சத்துணவு நிதியை முறைகேடாக கையாண்டமை தொடர்பில் விரிவான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

அது மட்டுமல்லாது மேலும் சில பாடசாலைகள் தொடர்பில் எமக்கு முறைப்பாடுகள் கிடைதுள்ளன. முறைப்பாடுகளை வழங்கியவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி ஆதாரங்களை பெற்றுக் கொள்ளும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் பாடசாலைகளில் வழங்கப்படும் மதிய உணவுத் திட்டத்தை கண்காணிப்பதற்கும் சோதனை இடுவதற்கும் விசேட குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அவர்கள் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுத் திட்டம் தொடர்பில் பாடசாலைகளுக்கு திடீர் கண்காணிப்பை மேற்கொண்டு அறிக்கையிடுவார்கள்.

ஆகவே, அரசாங்கத்தால் பெரும் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வழங்கப்படும் சத்துணவு திட்டத்தின் நோக்கம் உரிய முறையில் நிறைவேற்றப்பட வேண்டுமே அல்லாமல் முறைகேடுகளுக்கு அனுமதிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# சிறைச்சாலை அதிகாரியை மண்டியிட செய்து தாக்குதல்!

## விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, மே 15

கொழும்பு - புதிய மகசின் சிறைச்சாலை அதிகாரி ஒருவரின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த இனந்தெரியாத மூவர் அவரை மண்டியிடச் செய்து அச்சுறுத்தி, கொலை மிரட்டல் விடுத்து தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களம் உள்ளக விசாரணையை ஆரம்பித்துள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

புதிய மகசின் சிறைச்சாலையின் ஒழுக்கவியல் திணைக்களத்தில் இளைஞர் பிரிவுக்கான கண்காணிப்பாளராக கடமையாற்றும் அந்த அதிகாரியின் மினுவாங்கொடையில் அமைந்துள்ள வீட்டுக்குள் நுழைந்த மூவரே இவ்வாறு அச்சுறுத்தல் விடுத்து தப்பிச் சென்றுள்ளனர்.

வீட்டுக்குள் நுழைந்த மூவரும் அவரைத் தாக்கி மண்டியிட செய்து தலையில் துப்பாக்கியை வைத்து கொலை மிரட்டல் விடுத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது அவர்களுள் ஒருவர் “நீ சிறைச்சாலைக்கு செல்கிறாயா? அங்கு இருப்பவர்களை திருத்துவதற்கு முயற்சிக்கிறாயா? உன்னால் அவற்றை செய்ய முடியாது. சிறைச்சாலைக்குள் போதைப் பொருட்களை கொண்டு வருவதை உன்னால் நிறுத்த முடியாது. இவற்றில் தலையிடுவதை நிறுத்தி விட்டு வேறு வேலையை பார்த்து கொள். இதனை பொலிஸில் கூறினால் உன்னை நான் பார்த்துகொள்கிறேன்” என அச்சுறுத்தினர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேநேரம், அந்த மூவரால் தாக்கப்பட்ட சிறைச் சாலை அதிகாரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பெண் கொலை பிரேத அறிக்கை வெளியானது!

கண்டி, மே 15

கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்ட கம்பளையை சேர்ந்த பாத்திமா முனவுவரமா (வயது 22) என்ற யுவதியின் பிரேத பரிசோதனை அறிக்கை வெளியாகியுள்ளது.

அவரின் பிரேத பரிசோதனை கண்டி போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி சிவசுப்ரமணியத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று நடத்தப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையின்படி, பாத்திமாவின் மரணம் கழுத்தை நெரித்து கொல்லப்பட்டது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் அவர் பலாத்காரம் செய்யப்படவில்லை என்றும் மருத்துவ அறிக்கை கூறுகிறது.

இதேவேளை, கொல்லப்பட்ட பெண்ணின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன. (ஐ)

# பாடசாலைகளை விட்டு விலகிய மாணவர் விவரம் கோரும் ஆளுநர்!

யாழ்ப்பாணம், மே 15

வடக்கு மாகாணத்தில் கடந்த மூன்று வருடங்களில் பாடசாலைகளிலிருந்து இடை விலகிய மற்றும் விடுப்புச்சான்றிதழைப் பெற்றவர்களின் பட்டியலை உடன் வழங்குமாறு ஆளுநர் ஜீவன் தியாகராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் வடக்கு ஆளுநர் கூறுகையில்,

வட மாகாணத்தில் கடந்த மூன்று வருடங்களில் பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் இடைவிலகுகின்றார்கள். திடீரென இடைநடுவில் கல்வியை நிறுத்தி விடுப்புச் சான்றிதழைப் பெறுகின்றார்கள் போன்ற விடயங்கள் அதிகரித்துள்ளதாக தொடர்ச்சியாக தகவல்கள் கிடைத்து வருகின்றன.

இந்த விடயம் சம்பந்தமாக நான் விசேட கரிசனையைச் செலுத்தியதன் அடிப்படையில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக பாடசாலை அதிபர்களுக்கு அவ்விதமாக இடைவிலகிய மாணவர்களின் பட்டியலை வழங்குமாறு கோரியுள்ளேன்.

அண்மைய காலத்தில் பாடசாலைகளிலிருந்து இடைவிலகுகின்ற மாணவர்கள் சமூகக் குற்றங்களுக்களில் ஈடுபடுதல் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு இலக்காதல் ஆகிய விடங்கள் தொடர்பிலும் எனக்கு தனிப்பட்ட முறையில் தகவல்கள் கிடைத்துள்ளன.

ஆகவே, இந்த நிலைமைகளை நீடிப்பதற்கு இடமளிக்க முடியாது. நாட்டின் எதிர்கால சந்ததியினரை பாதுகாப்பது எமது பெரும் கடமையாகின்றது. அந்த வகையில் குறித்த பட்டியலைப் பெற்று உரிய நடவடிக்கைகள் அடுத்தகட்டமாக முன்னெடுக்கப் படவுள்ளன - என்றார் . (ஐ)

ஈழநாடு
Eelanadu
15.05.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 01

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# போராட்டங்கள் தொடர்பில் மக்களின் புரிதல்?

பௌத்த மயமாக்கல் தொடர்பில் அரசியல்வாதிகளும் அரசியல் கட்சிகளோடு தொடர்புள்ளவர்களும் பேசிவருகின்றனர். ஆனால், பொதுமக்களின் பங்குபற்றலை நோக்கினால் வெறுமையே தெரிகின்றது. தையிட்டியில் பௌத்த விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்களில் அரசியல்வாதிகளும் அவர்களின் ஆதவாளர்களும் மட்டுமே இருந்தனர். திருகோணமலையில் புத்தர் சிலை வைக்கப்போவதாக (அவ்வாறான நிகழ்வு இடம்பெறவில்லை) அனுமானித்து, இடம்பெற்றதாகக் கூறப்படும் (மக்கள் எதிர்ப்பு என்னும் பெயரில்) நிகழ்வில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் 10 - 20 வரையிலான எண்ணிக்கையானவர்களே இடம்பெற்றனர்.

திருகோணமலை மக்கள் எவ்விதமான சலனத்தையும் காண்பிக்கவில்லை. ஆனால், இவ்வாறான விடயங்கள் மக்கள் போராட்டம் என்னும் பெயரில்தான் விளம்பரப்படுத்தப்படுகின்றது. ஆனால், மக்களோ இவ்வாறான விடயங்கள்மீது நாட்டமற்றவர்களாகவே இருக்கின்றனர். இதற்கு என்ன காரணம்? அரசியல் தலைமைகள் என்போரை மக்கள் நம்பவில்லையா? அல்லது இவ்வாறான எதிர்ப்புகள் தேவையற்றவை என்று மக்கள் கருதுகின்றனரா? அல்லது இவ்வாறான எதிர்ப்புகள் மூலம் எதனையும் சாதிக்க முடியாதென்று மக்கள் கருதுகின்றனரா? ஏனெனில், இவ்வாறான எதிர்ப்புகள் மூலம் எதனையும் இதுவரையில் கட்சிகளால் தடுத்துநிறுத்த முடியவில்லை. நீதிமன்றத்தை நாடியும் எதிர்பார்த்த பயன்கிட்டவில்லை. ஏனெனில், தொல்பொருள் திணைக்களமும் புத்தசாசன அமைச்சும் தனியார்களும் இணைந்து பணியாற்றுவதால் சட்டரீதியாக இந்த விடயத்தை அணுகுவதும் சிக்கலான ஒன்றாக இருககின்றது. இதுவரையான அனுபவம் இவ்வாறானதே!

மாகாண சபை தேர்தல் இல்லாத காலத்தில்தான் இந்த விடயங்கள் வேகமாக அரங்கேறி வருகின்றன. ஒருவேளை மாகாண சபை இயங்குநிலையில் இருந்தால் இவ்வாறான செயல்பாடுகளை முனனெடுக்க முடியாமல் போயிருக்கும். மாகாண சபை உறுப்பினர்கள் என்னும் அதிகாரத்தோடு இவ்வாறான விடயங்களை அணுகும்போது ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்ட செயல்பாடுகளுக்கு எதிராக மக்களை அணிதிரட்டுவதும் இலகுவாக இருக்கும் - அதேவேளை மக்களும் அதிகாரம் உள்ளவர்களோடு தங்களை இணைத்துக்கொள்ள விரும்புவார்கள். அரசியல் அதிகாரத்தைப் பிரயோகிக்கக்கூடிய அனைத்து இடங்களையும் தமிழர்கள் பயன்படுத்த வேண்டும்.

உச்சபட்சமான இலக்கு தொடர்பில் சிந்திப்பதிலோ அல்லது பேசுவதிலோ தவறில்லை. ஆனால், குறிப்பிட்ட சூழ்நிலையை கையாளாமல் முன்னோக்கி பயணிக்க முடியாது. இந்தப் பின்புலத்தில் சிந்தித்தால் தற்போது இருப்பது மாகாண சபை மட்டும்தான். அதனை உச்சபட்சமாகக் கையாண்டு கொண்டுதான் அடுத்த கட்டம் தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

இந்து மதத்தை அழிக்கின்றார்கள் - இந்து மதத்துக்கு ஆபத்து வருகின்றதென்று கதறுவதிலும் அர்த்தம் இல்லை. ஏனெனில், தமிழ்த் தேசிய அரசியலில் மதத்துக்கு பிரதான இடம் இருந்ததில்லை. இதுவரையில் வடக்கு - கிழக்கில் பெரும்பான்மையாக வாழும் இந்து தமிழ் மக்கள் என்னும் நிலைப்பாடு அரசியல் மயப்படுத்தப்படவில்லை. தற்போது பௌத்த மயமாக்கல், இந்து ஆலயங்களை இலக்கு வைக்கும் பின்புலத்தில்தான், தற்போது தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் இந்து ஆலயங்கள், இந்து கலாசாரம் தொடர்பில் பேச முற்படுகின்றனர். ஆரம்பத்திலிருந்தே இவ்வாறானதோர் அரசியல் நிலைப்பாடு தமிழ்த் தேசியத்தில் இருந்திருந்தால் இந்தியாவிலுள்ள இந்துக்களின் அனுதாபத்தை - ஆதரவை பெற்ற மக்களாக - ஈழத் தமிழ் மக்கள் இருந்திருக்கலாம். ஆனால், ஈழத் தமிழ் மக்கள் மக்களின் அரசியல் திராவிட சித்தனை போக்குடனேயே அடையாளப்படுத்தப்பட்டது. திராவிட சிந்தனை பாரம்பரியம் என்பது அடிப்படையிலேயே ஹிந்தி மொழி எதிர்ப்பையும் அதன் மூலம் இந்துமத எதிர்ப்பையும் உட்கொண்டிருந்தது. இதன் விளைவாக, இந்து மக்களாக ஈழத் தமிழ் மக்கள் வளர்சியடையவில்லை. ஆனால், இப்போது சுடலைஞானம் போல், அரசியல்வாதிகள் இந்து மதம் அழிக்கப்படுவதாக கதறுகின்றனர்.

# தமிழின படுகொலைக்கு நீதி கோரி அம்பாறையிலிருந்து ஊர்தி பவனி!

பொத்துவில், மே 15



தமிழின படுகொலைக்கு நீதி கோரி அம்பாறை வீரமுனை படுகொலை நினைவு தூபியில் இருந்து நேற்றைய தினம் வாகன ஊர்தி பவனி ஒன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் ஆரம்பிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் இன படுகொலையின் 14ஆவது நினைவேந்தலையிட்டு தமிழின படுகொலை நீதி கோரியே இந்த வாகனப் பவனி ஆரம்பிக்கப்பட்டது.

அம்பாறை வீரமுனை கோவிலில் 1990ஆம் ஆண்டு தமிழர்கள் 175 பேர் படுகொலை செய்யப்பட்ட நினைவு தூபில் ஈகைச்சுடர் ஏற்றி படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு ஆத்ம சாந்தி வேண்டி 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தி ஊர்தி ஊர் பவனியை ஆரம்பித்தனர்.

இந்த ஊர்திபவனி அங்கிருந்து மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு அமைக்கப்பட்ட நினைவு தூபியை அடைந்தது. தொடர்ந்து சத்துருக்கொண்டான் படுகொலை நினைவு தூபியில் அஞ்சலி செலுத்திய பின்னர் திருகோணமலையை சென்றடைந்தது.

இன்று திங்கட்கிழமை காலை திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள படுகொலை நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தி பயணத்தை தொடரும். எதிர்வரும் 18ஆம் திகதி இந்த ஊர்தி முள்ளிவாய்க்காலை சென்றடையும். (ஐ)

# போதைப்பொருள் வலையமைப்பின் முக்கியஸ்தரான பெண் ஒருவர் கைது!

கொழும்பு, மே 15

நாட்டின் போதைப் பொருள் வலையமைப்பை வெளிநாட்டிலிருந்து வழிநடத்தும் ‘பம்மா’ குழுவின் முக்கிய உறுப்பினரான பெண்ணொருவரை ஹெரோயினுடன் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரிடம் நீண்ட நேரம் விசாரணை நடத்தியதில் அவர் ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்டமை தெரிய வந்துள்ளது.

சந்தேகநபரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களை சந்தேக நபரின் கணவரின் தம்பியான விக்னேஷ் என்ற நபரே அனுப்பி வைத்துள்ளமையும் அம்பலமாகியுள்ளது.

விக்னேஷ் என்பவர் தற்போது வெளிநாட்டில் இருக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை செய்யும் குழுவின் உறுப்பினராவார். அத்துடன், போதைப்பொருள் கடத்தல்காரரான ஸ்டான்லி கென்னடி பெர்னாண்டோ என்ற பம்மா குழுவின் முக்கிய உறுப்பினராவார்.

சந்தேக நபரின் கணவர் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த போது கரையோரப் பொலிஸ் நிலையப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமைச்சர் ஹரீனுடனே இனி எனது பயணம்!

## வடிவேல் சுரேஷ் எம். பி.

கொழும்பு, மே 15

அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவுடன் சேர்ந்தே இனி தனது அரசியல் செயல்பாடுகளை முன்னெடுக்கப் போவதாக பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.


பதுளையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட வடிவேல் சுரேஷ், தான் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவின் கட்சி என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பிருந்தே சஜித் பிரேமதாஸவுக்கும் வடிவேல் சுரேஷுக்கும் இடையில் கருத்து மோதல்கள் இடம்பெற்றிருந்தன.

இதன் தொடர்ச்சியாக கடந்த மே தின பேரணியும் ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டம் அல்ல என்றும் அது தனக்காக சேர்ந்த கூட்டம் எனவும் வடிவேல் சுரேஷ் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், ஏற்கனவே ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகிசென்ற ஹரீன் பெர்னாண்டோ சஜித் ஒரு கோழை என்றும் தமது தாய் கட்சியான ஐக்கிய தேசிய கட்சிக்கு செல்வதில் எந்த தவறும் இல்லை என்றும் தெரிவித்திருந்தார். இந் நிலையில் வடிவேல் சுரேஷ் ஐக்கிய தேசிய கட்சியில் இணைவாரா - என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மே - 15 திங்கட்கிழமை
சோபகிருது வருடம் - வைகாசி 01
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : சூன்ய

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
சமயோஜித புத்தியால் எல்லா பிரச்னைகளையும் எளிதாக சமாளித்து வெற்றி பெறுவீர்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். மதிப்பு கூடும் நாள்.

**இடபம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமை வெளிப்படும். முயற்சிகள் பலிதமாகும்.

**மிதுனம்**
கணவன் மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். தடைகள் உடைபடும் நாள்

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் தேவையற்ற அலைச்சல்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை பகைத்து கொள்ள வேண்டாம். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**சிம்மம்**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் மதிப்பு கூடும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**கன்னி**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் ராஜதந்திரத்தை உடைத்து விடுவீர்கள். மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**விருட்சிகம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். திருப்திகரமான சூழ்நிலை உருவாகும். உழைப்பால் உயரும் நாள்.

**தனுசு**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். தைரியமான முடிவுகள் எடுக்கும் நாள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். எதிர்பார்த்த லாபம் உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரி ஒத்துழைப்பார். புது அத்தியாயம் தொடங்கும்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**மீனம்**
எதிர்பார்த்த வேலை தாமதமாக முடியும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்து போங்கள். அதிகாரிகளை அனுசரித்துப் செல்லுவது நல்லது. அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

### பாராளுமன்ற தேர்தல்:
# திருமாவளவன் திருவள்ளூரிலும் கமல் தென்சென்னையிலும் போட்டி?

சென்னை, மே 15

2024 பாராளுமன்றத் தேர்தலில் திருவள்ளூர் தொகுதியில், விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவனும், சிதம்பரம் தொகுதியில், தி.மு.க., கொள்கை பரப்பு செயலர் ஆ. ராஜாவும் போட்டியிட திட்டமிட்டுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இதேநேரம், மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல் ஹாசன் தென் சென்னை தொகுதியில் போட்டியிடவுள்ளார்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில், சிதம்பரம் தொகுதியில் திருமாவளவனும், விழுப்புரத்தில் அக்கட்சி பொதுச்செயலர் ரவிகுமாரும் போட்டியிட்டு வெற்றி பெற்றனர். சிதம்பரம், விழுப்புரம் அருகருகே உள்ள தொகுதிகள் என்பதால், இருவரும் எம்.பி.,யாக இருந்தும், வட மாவட்டங்களில் கட்சியை வலுவாக கட்டமைக்க முடியவில்லை என திருமாவளவன் கருதுகிறார்.

ஏற்கனவே, இரண்டு முறை சிதம்பரம் தொகுதியில் திருமாவளவன் வெற்றி பெற்று விட்டார். அந்தத் தொகுதியை தாண்டி, தானும் தன் கட்சியும் கால் ஊன்ற வேண்டும் என்பதற்காக, தொகுதி மாறுகிறார். வரும் பாராளுமன்றத் தேர்தலில், திருவள்ளூர் தொகுதியில் போட்டியிடத் திட்டமிட்டுள்ளார்.

இந்நிலையில், நீலகிரி தொகுதியில், மத்திய அமைச்சர் முருகன் போட்டியிட வாய்ப்பு இருப்பதால், அந்தத் தொகுதியை விட்டு வெளியேற ஆ. ராஜா விரும்புகிறார். அவரின் சொந்த தொகுதியான பெரம்பலூர், பொது தொகுதி என்பதால் தன் மகன் அருணனை நிறுத்த அமைச்சர் நேரு முயற்சிக்கிறார். இதனால், சிதம்பரம் தொகுதியை ஆ. ராஜா குறி வைக்கிறார். திருமாவளவன் தொகுதி மாறுவதால் சிதம்பரத்தை கைப்பற்றுவதில் ஆ.ராஜாவுக்கு சிரமம் இருக்காது என சொல்லப்படுகிறது.

இதனிடையே, மக்கள் நீதி மய்யம் கட்சியில் தென் சென்னை தொகுதியில் உறுப்பினர்கள் சேர்த்தல் மற்றும் முக்கிய இதர பணிகள் முழுவீச்சில் நடக்கின்றன. கடந்த பாராளமன்றத் தேர்தலில், அவரின் கட்சி சார்பில் போட்டியிட்ட ஐ. ஏ. எஸ். அதிகாரி 1.20 இலட்சம் வாக்குகள் பெற்றார். சட்டசபை தேர்தலிலும் அந்தக் கட்சி இங்கு கணிசமான வாக்குகளைப் பெற்றுள்ளது. எனவே, பாராளுமன்றத் தேர்தலில இந்த தொகுதியில் கமல் போட்டியிடுவது உறுதியாகி உள்ளது. (ஐ)

# திராவிட நிலப்பரப்பிலிருந்து பா.ஜ.க. அகற்றப்பட்டுவிட்டது

### முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, மே 15

“பா. ஜ கவின் பழிவாங்கும் அரசியலுக்குத் தக்க பாடம் புகட்டி அவர்கள் தங்கள் கன்னடிகப் பெருமிதத்தை நிலைநிறுத்தியுள்ளனர். திராவிட நிலப்பரப்பில் இருந்து பா. ஜ. க. முற்றிலுமாக அகற்றப்பட்டுள்ளது”, என்று கர்நாடக தேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சிக்கு தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான அவரின் பதிவில், “கர்நாடகத்தில் மிகச் சிறப்பான வெற்றியைப் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சிக்கு எனது வாழ்த்துகள். கர்நாடக மக்கள் வாக்களித்தபோது, நியாயப்படுத்த முடியாத வகையில் சகோதரர் ராகுல் காந்தியை, பாராளுமன்றத்தில் இருந்து பதவிநீக்கம் செய்தது. நாட்டின் முதன்மைப் புலனாய்வு அமைப்புகளை எதிர்க்கட்சிகளுக்கு எதிராகத் தவறாகப் பயன்படுத்தியது, ஹிந்தி திணிப்பு, பெருமளவிலான ஊழல் என அனைத்தும் அவர்கள் மனதில் எதிரொலித்திருக்கிறது. பா. ஜ. கவின் பழிவாங்கும் அரசியலுக்குத் தக்க பாடம் புகட்டி அவர்கள் தங்கள் கன்னடிகப் பெருமிதத்தை நிலைநிறுத்தியுள்ளனர்.

திராவிட நிலப்பரப்பில் இருந்து பா. ஜ. க. முற்றிலுமாக அகற்றப்பட்டுள்ளது. அடுத்து, 2024 பொதுத்தேர்தலிலும் வெல்ல நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றுவோம். இந்தியாவில் மக்களாட்சியையும், அரசமைப்பு விழுமியங்களையும் மீட்போம்” - என்று கூறியுள்ளார். (ஐ)

# தமிழ்நாட்டுக்கு வருகிறார் உள்துறை அமைச்சர் அமித்ஷா

சென்னை, மே 15

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அடுத்த மாதம் தமிழகத்துக்கு சுற்றுப் பயணம் செய்யவுள்ளார். அடுத்தாண்டு நடக்கவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்காக தமிழகத்தில் அரசியல் வியூகம் அமைப்பது தொடர்பாக ஆலோசிப்பதற்காகவே அவர் வரவுள்ளார் என்று கூறப்படுகிறது.

தி.மு.க.வுக்கு எதிராக கட்சிகளை ஒன்றிணைக்க பல கட்சிகளுடன் அமித் ஷா ஆலோசனை நடத்துவார் என்கின்றனர். பா. ம. க., - தே. மு. தி. க., ஆகிய கட்சி தலைவர்களுடன் அமித் ஷா பேசுவார் என புதுடில்லி தலைவர்கள் சொல்கின்றனர்.

அவர் வரும் சமயத்தில், தமிழகத்தை பொறுத்தவரை தேசிய ஜனநாயக கூட்டணிக்கு பழனிசாமிதான் தலைவர் என அமித் ஷா தெரிவிக்கவுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# மூடநம்பிக்கை ஒழிப்பு சட்டம் தமிழ்நாட்டுக்கு அவசியம்!

### திராவிடர் கழகம் வலியுறுத்து

சென்னை, மே 15

தமிழ்நாட்டில் மூடநம்பிக்கை ஒழிப்பு சட்டம் தேவை என்று திராவிடர் கழக தலைவர் கி. வீரமணி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில், “ஆவிகளிடம் பேச வைப்பதாக ஆசைக் காட்டி பொறியியலாளரிடம் ரூ.2 கோடி மோசடி செய்த கேரள மந்திரவாதி அதிரடியாக கைது செய்யப்பட்டார் என்று செய்தி வெளிவந்துள்ளது.

இது போன்ற மூடநம்பிக்கைகளுக்கு பலியாகி மக்கள் பாதிக்கப்படும் நிகழ்ச்சிகள் இப்போதெல்லாம் தமிழ்நாட்டிலும் பல மாவட்டங்களிலும் பரவி வருகின்றன. மாந்திரீகம் என்ற பெயரில் பெண்களிடம் நகை பறித்தல், பில்லி, சூனியம் எடுக்கும் பெயரால் பண மோசடி, நகைக் கொள்ளைகள், பெண்களிடம் வன்கொடுமை, பாலியல் சீண்டல்கள், சில இடங்களில் நரபலி, தமிழ்நாட்டின் சில மாவட்டங்களில் இவை போன்று நடந்தது கண்டறியப்பட்டுள்ளது வேதனை தருவதாகும்.

இந்திய அரசமைப்பு சட்டத்தின் 51 ஏ (எச்) பிரிவு ‘இந்திய குடிமக்களிடையே அறிவியல் மனப்பாங்கை வளர்த்து கேள்வி கேட்கும் திறனை வளர்ப்பது, சீர்திருத்தம், மனிதநேயம் பரப்புதல் ஒவ்வொரு குடிமகனின் அடிப்படை கடமை’ என்று வற்புறுத்துகிறது. மராட்டியத்தில் மூடத்தனத்துக்கு எதிராக தனி சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலும் மூட நம்பிக்கை ஒழிப்பு சட்டம் தேவை - என்றுள்ளது. (ஐ)



# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்; முன்னணியினர் இரத்த தானம்!

யாழ்ப்பாணம், மே 15

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டு பல்வேறு செயல் - நலத் திட்டங்கள் தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரத்த தான முகாம் நடைபெற்றது.

நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் நினைவிடத்தில் இடம்பெற்ற இந்த இரத்த தான முகாமில் கட்சியினர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு குருதிக் கொடை வழங்கினர். (ஐ)

# டுபாயில் கொல்லப்பட்ட மகனின் உடலை கொண்டுவர உதவுங்கள்

## தாயார் ஒருவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 15

டுபாயில் வேலைக்கு சென்ற இடத்தில் குத்திக் கொல்லப்பட்ட தனது மகனின் சடலத்தை யாழ்ப்பாணம் கொண்டுவரவும் அத்துடன், அங்கு வேலை செய்துவரும் மற்றொரு மகனை அழைத்து வரவும் உதவுமாறு தாயார் ஒருவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் - சுண்டுக்குளியை சேர்ந்த 26 வயதுடைய கமலதாஸ் நிலக்சன் மற்றும் அவருடைய சகோதரரான 22 வயதுடைய கமலதாஸ் டிலக்சன் ஆகியோர் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் டுபாய்க்கு வேலைக்காக சென்றிருந்தனர்.

இந்நிலையில், 26 வயது நிலக்சன் கத்தியால் குத்தி படுகொலை செய்யப்பட்டார். கொலை செய்யப்பட்டவருடன் இரு இந்தியர்கள் காலையில் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் என்று பின்னர் மாலையில் அவர் கொலை செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த இளைஞனின் படுகொலைக்கான காரணம் தெரிய வராத நிலையில் உயிரிழந்தவரின் சடலத்தை கொண்டுவரவும் தனது இரண்டாவது மகனான டிலக்சனை அழைத்து வர உதவுமாறு அவர்களின் தாயார் கோரிக்கை விடுத்துள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட இளைஞனின் கைபேசி, கடவுச்சீட்டு, அடையாள அட்டை என்பனவும் திருடப்பட்டு கொலைக்கான சாட்சியங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# 4 நாட்களாக இருளில் தவிக்கும் வவுனியாவின் கிராமங்கள்!

## மின்சார சபை அசிரத்தை என சாடல்!

வவுனியா, மே 15

**வவுனியாவில் மூன்று கிராமங்களின் மக்கள் கடந்த நான்கு நாட்களாக மின்சாரம் இன்றி சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவித்துள்ள மக்கள், இது தொடர்பில் மின்சார சபைக்கு அறிவித்தபோதும் அதிகாரிகள் அலட்சியப் போக்குடன் செயல்படுவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

மாகாறம்பைக்குளம், காத்தார்சின்னக்குளம், சிறிராமபுரம் வீட்டுத்திட்டம் கிராமங்களின் மக்களே இவ்வாறு மின்சாரம் இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மின்சார தடங்கலால் பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், மின்சாரத்தை மூலதனமாக கொண்டும் தொழில் புரியும் பலரும் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், மின்சார தடங்கல் தொடர்பாக வவுனியா மின்சார சபை மற்றும் வடக்கு மாகாண மின்சார சபையின் வாடிக்கையாளர் சேவை நிலையத்துக்கு முறைப்பாடு மேற்கொண்டும் தங்களுக்கு உரிய பதில் கிடைக்கவில்லை எனவும் அதிகாரிகள் அசமந்தபோக்குடன் செயல்படுகின்றனர் என்றும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (ஐ)

# பாதுகாப்பின்றி கொண்டுசெல்லப்பட்ட வாகனத்தால் 3 சிறுமிகள் படுகாயம்!

முல்லைத்தீவு, மே 15

புதுக்குடியிருப்பில் விபத்துக்குள்ளான வாகனத்தை பாதுகாப்பு இல்லாத வகையில் எடுத்துச் சென்ற போது வாகன பாகம் கழன்று விழுந்தில் 3 சிறுமிகள் காயமடைந்தனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவின் மன்னாகண்டல் பகுதியில் நேற்று முன்தினம் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான பட்டாரக வாகனத்தை, மற்றொரு வாகனத்தில் ஏற்றி வாகன திருத்தகத்துக்கு எடுத்துச் சென்ற போதே இந்த விபத்து சம்பவத்துள்ளது.

எனினும், வாகனம் பாதுகாப்பான முறையில் கட்டிக் கொண்டு செல்லவில்லை. இதன்போது, வாகனத்தின் மேல்பகுதி காற்றில் பறந்து, வீதியோரம் நின்றிருந்த 3 சிறுமிகளை தாக்கியது. இதில், 15,12,8 வயதான சிறுமிகளே படுகாயமடைந்தனர்.

சகோதரிகளான 3 சிறுமிகளும் படுகாயமடைந்து புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் ஒரு சிறுமி யாழ். போதனா மருத்துவமனைக்கும் இருவர் வவுனியா பொது வைத்திய சாலைக்கும் மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளனர். (ஐ)

# இரு சடலங்கள் மீட்கப்பட்டன!

கொழும்பு, மே 15

குருநாகல் வாரியபொல பிரதேசத்தில் குளமொன்றில் இருந்து இரு சடலங்கள் மீட்கப்பட்டன. தடயவியல் பரிசோதனையில் அவர்கள் இருவரும் மின்சாரம் தாக்கியே உயிரிழந்தனர் என்று தெரிய வந்துள்ளதாக வாரியபொல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர்கள், இருவரும் சட்டவிரோத மின்வேலியில் சிக்கியே உயிரிழந்திருக்கலாம் என்றும் அதனை மறைக்க சடலங்களை குளத்தில் போட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் சட்டவிரோத மின்வேலியை அமைத்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# தமிழரசின் செயல்குழு வவுனியாவில் கூடியது!

வவுனியா, மே 15

தமிழரசு கட்சியின் மத்திய செயல்குழு கூட்டம் வவுனியாவில் வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்றது.

தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், செயலாளர் ப. சத்தியலிங்கம், சீ. வீ. கே. சிவஞானம், பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், சி. சிறீதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சீ. யோகேஸ்வரன், சி. சிவமோகன், பா.அரியநேந்திரன், ஞா. சிறிநேசன், மட்டக்களப்பு மாநகர சபை முன்னாள் முதல்வர் சரவணபவன், பீற்றர் இளஞ்செழியன், மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் யாப்பு திருத்தம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தந்தை மகளை பார்க்க ஆசைப்பட்டதால் சிறுமியை கடத்த முயன்றாராம் இளைஞர்!

முல்லைத்தீவு, மே 15

மகளை தந்தை பார்க்க ஆசைப்பட்டதாலேயே சிறுமியை கடத்த முற்பட்டதாக முல்லைத்தீவில் கைது செய்யப்பட்ட இளைஞர் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு - கைவேலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

நேற்று முன்தினம் காலை 7 மணிக்கு தனியார் வகுப்புக்காக 10 வயது சிறுமியை, தாயார் மோட்டார் சைக்கிளில் கொண்டு வந்து இறக்கியுள்ளார்.

அந்தச் சமயம், மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞன் சிறுமியை இழுத்து மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் செல்ல முற்பட்டார். சிறுமி சத்தமிட, அந்தப் பகுதியில் நின்றவர்கள் குழுமி அவரை மடக்கிப் பிடித்தனர்.

கோம்பாவிலை சேர்ந்த 23 வயதான இளைஞனே மடக்கிப் பிடிக்கப்பட்டார். அவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சிறுமி முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, சட்ட மருத்துவ அதிகாரியால் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, மருத்துவமனையில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

கைதான இளைஞனிடம் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணை நடத்தினர். இதில், சிறுமியின் தந்தையார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, சிறுமியை அழைத்துச் செல்லவே முற்பட்டதாக இளைஞன் தெரிவித்துள்ளார்.

சிறுமியின் பெற்றோர் குடும்ப தகராறு காரணமாக பிரிந்து வாழ்கிறார்கள். தனது பிள்ளையை பார்க்க மனைவி அனுமதிப்பதில்லையென குறிப்பிட்டு, தன்னிடம் உதவி கோரியதாக இளைஞன் தெரிவித்தார்.

சிறுமியின் தந்தையும், கைதான இளைஞனும் நண்பர்கள்.

தனியார் வகுப்புக்கு வரும் போது, சிறுமியை அழைத்து வருமாறு தந்தை கேட்டதால், நேற்று சிறுமியை அழைத்துச் செல்ல முற்பட்டதாகவும், சிறுமிக்கு தன்னை தெரியாதால் கத்தி சத்தமிட்டதாகவும் இளைஞன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகிறார்கள். (ஐ)

# ஆனல்ட் தன்னை தாக்கினார் என்று தமிழரசு உறுப்பினர் முறைப்பாடு!

யாழ்ப்பாணம், மே 15

இலங்கை தமிழரசு கட்சியின் பணிமனைக்குள் முன்னாள் யாழ் மாநகர சபை முதல்வர் இ. ஆனல்ட்டால் தாக்கப்பட்டார் என்று தெரிவித்து அதே கட்சியை சேர்ந்த ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தமிழரசு கட்சியின் மார்ட்டின் வீதி அலுவலகத்தில் யாழ்ப்பாண தொகுதிக் கிளை கூட்டம் நடந்தது. கூட்டம் முடிவடைந்த பின்னரே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை தமிழரசு கட்சியின் உறுப்பினரும் சிவசேனை செயல்பாட்டாளருமான ஜெயமாறன் என்பவரே தாக்கப்பட்டார்.

“சிவசேனையில் உள்ள உனக்கு தமிழரசு கட்சியில் என்ன வேலை? நாங்கள் சொல்லும் சட்டத்திட்டத்தின்படி தான் நடக்க வேண்டுமென கூறி, என் கன்னத்தில் அடித்தார். நான் நிலத்தில் விழுந்துவிட்டேன். கட்சி பிரமுகர்கள், உறுப்பினர்கள் பலர் அங்கிருந்தனர். யாரும் எதுவும் செய்யவில்லை. நான் எனது சகோதரனுக்கு தொலைபேசியில் அறிவித்து மருத்துவமனையில் சேர்ந்தேன்“ என தாக்கப்பட்ட ஜெயமாறன் கூறியுள்ளார்.

இதேநேரம், இது தொடர்பில் ஆனல்ட்டின் கருத்தை அறிய முடியவில்லை. (ஐ)

# கிறிஸ்தவ சட்டம்தான் தமிழரசில் நடைமுறையா?

## சிவசேனை அமைப்பு கேள்வி

யாழ்ப்பாணம், மே 15

தமிழரசு கட்சியில் கிறிஸ்தவ சட்டம்தான் நடைமுறைப்படுத்தப்படும் என்றுகூறி இலங்கை தமிழரசு கட்சியின் யாழ்ப்பாண கிளை கூட்டத்தில் பங்கேற்ற ஒருவர் தாக்கப்பட்டார் என்று சிவசேனை அமைப்பின் செயலாளர் சிறீந்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.

இதேநேரம், இலங்கை தமிழரசு கட்சியில் வவுனியாவில் சைவ எம். பிக்கள் இல்லை. இதே நிலையைத்தான் யாழ்ப்பாணத்திலும் உருவாக்க ஆனல்ட் போன்றவர்கள் முயற்சிக்கின்றனர் என்று சிவசேனையின் த. பிரமேந்திரராசா குற்றம் சாட்டினார்.

இலங்கை தமிழரசு கட்சியின் யாழ்ப்பாண தொகுதி கிளை கூட்டத்தின் பின்னர் சிவசேனை அமைப்பிலும் அங்கம் வகிக்கும் தமிழரசு கட்சி உறுப்பினரை அதே கட்சியை சேர்ந்தவரான யாழ். மாநகர முன்னாள் முதல்வர் இ. ஆனல்ட், சிவசேனையில் உள்ள உனக்கு தமிழரசு கட்சியில் என்ன வேலை? நாங்கள் சொல்லும் சட்டத்திட்டத்தின்படிதான் நடக்க வேண்டுமென கூறி தாக்கினார் என்று பாதிக்கப்பட்டவர் தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே அந்த அமைப்பினர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்தனர். (ஐ)

# பாவனைக்கு உதவாத 300 கிலோ கருவாடு மீட்பு

கொழும்பு, மே 15

பாவனைக்கு உதவாத பழுதடைந்த 300 கிலோகிராம் கருவாடுகளையும் அவற்றை விற்பனைக்காக கொண்டு செல்லப்பட்ட லொறியையும் சுகாதார மருத்துவ அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

பதுளை - ஹாலிஎல சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினரே இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

ஹாலிஎல நகரப் பகுதி மற்றும் சந்தைகளில் பாவனைக்கு உதவாத கருவாட்டை விற்பனை செய்வதாக சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து அந்த களஞ்சியசாலையை பரிசோதித்த சுகாதார அதிகாரிகள் பாவனைக்கு உதவாத 300 கிலோவுக்கும் அதிகமான கருவாடுகள் மீட்கப்பட்டன.

வியாபாரியான சந்தேக நபரை கைது செய்துள்ள பொலிஸார் அவரை பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பொலிஸ் உத்தியோகத்தரின் உதவியுடன் பணம் கொள்ளை

கொழும்பு, மே 15

லொறி ஒன்றிலிருந்து பணம் கொள்ளையிடப்பட்ட சம்பவத்துடன் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கும் தொடர்பு உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பதுளை - கிரானகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புதுகெஹின்ன பகுதியில் இடம்பெற்ற இந்த கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடையவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், இந்தச் சம்பவத்தின் பின்னர் சந்தேகத்துக்குரிய பொலிஸ் உத்தியோகத்தர் இதுவரை பணிக்கு சமுகமளிக்கவில்லை என கிரானகம பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்துக்குரிய பொலிஸ் உத்தியோகத்தர் சிலாபம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தராவார். பல மாதங்களாக அவர் பணிக்கு சமுகமளிக்காத காரணத்தால் சந்தேக நபர் சேவையை விட்டு விலகியுள்ளார் என்று கருதப்படுவதாகவும் கிரானகம பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தினசரி வேலை நேரம் அதிகரிப்பு:

# பொது கலந்தாய்வு பின்னரே முடிவு என்கிறார் அமைச்சர்!



**கொழும்பு, மே 15**

**தினசரி வேலை நேரத்தை 8 மணித்தியாலங்களில் இருந்து 12 மணித்தியாலங்களாக அதிகரித்தல், வாரத்தில் நான்கு நாட்கள் மட்டுமே வேலை செய்யும் திட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்த உள்ளது என்று சில தொழில்சங்கங்கள் முன்வைத்த குற்றச்சாட்டை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார மறுத்துள்ளார்.**

தொழில்சங்கங்கள் முன்வைத்துள்ள கருத்துகள் தவறானவையாகும். இது தொடர்பில் பொதுக்கலந்தாய்வு ஒன்றை ஆரம்பித்துள்ளோம். அதன்பின்தான் ஒரு முன்மொழிவை உருவாக்க வேண்டும்.

இதற்கு முன்னதாக, நாளொன்றுக்கு வேலை நேரத்தை 8 மணித்தியாலத்திலிருந்து 12 மணித்தியாலங்களாக அதிகரிப்பதுடன் வாரத்துக்கு வேலை நாட்களை 4 ஆக மாற்ற அரசாங்கம் திட்டமிடுவதாக, சுதந்திர வர்த்தக மண் டல தொழிலாளர் கூட்டுத் தொழிற்சங்கத்தின் இணைச் செயலாளர் அன்ரன் மார்க்கஸ் தெரிவித்திருந்தார்.

"தொழிலாளர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் இப்போது அனுபவித்து வரும் சலுகைகளை இழந்து விடுவார்கள். அனைத்துத் தொழிலாளர்களும் இதைத் தடுக்க முன்வர வேண் டும்" என அவர் தெரிவித்திருந்தார். (ஐ)

# அல்லைப்பிட்டி கடற்கரையில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், மே 15

அல்லைப்பிட்டி கடற்கரையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கரையொதுங்கியிருந்த நிலையில் குறித்த சடலம் நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்தின் உடற்பாகங்களில் பல பகுதிகள் சிதைந்து போயுள்ளதால் உரியவரை அடையாளம் காண்பதில் சிக்கல் நிலவுவதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

மீட்கப்பட்ட சடலம் யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை ஊர்காவற்துறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# ரூ. 150ஆல் குறைந்தது சிமெந்து

கொழும்பு, மே 15

ஒரு பைக்கெற் சிமெந்தின் விலை 150 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. நள்ளிரவு முதல் புதிய விலை நடைமுறைக்கு வந்தது.

இதன்படி, நள்ளிரவில் இருந்து 50 கிலோ சிமெந்து பைக்கற்றின் விலை 2 ஆயிரத்து 600 என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னர் ஒரு பைக்கெற் சிமெந்தின் விலை 2,750 ரூபாயாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அரச ஊழியர்க்கு இன்று முதல் கைவிரல் அடையாள பதிவு

கொழும்பு, மே 15

அனைத்து அரச ஊழியர்களும் இன்று திங்கட்கிழமை முதல் சேவைக்கு வருகை தருவது மற்றும் சேவை முடிந்து வெளியேறிச் செல்வதை பதிவிடுவதற்காக விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்துவது கட்டாயமானது என்று பொது நிர்வாக செயலாளர் ரஞ்சித் அசோக தெரிவித்தார்.

விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்துவது தொடர்பான சுற்று நிருபம் ஏற்கனவே வெளியிடப்பட்டது. இதன் பிரகாரம், 2021.10.01ஆம் திகதிய 02/2021 (ம) இன் 7ஆவது பந்தியின் ஏற்பாடுகள் இன்று திங்கட்கிழமை முதல் செயல்படுத்தப்படும்.

மேலும், சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய செயற்படுவதற்கு அனைத்து நிறுவன தலைவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# மூழ்கிக்கொண்டிருந்த படகிலிருந்து 6 மீனவர்களை மீட்டது கடற்படை!

கொழும்பு, மே 15

களுத்துறை - பேருவளை மேற்கு கடற்பரப்பில் மூழ்கிக் கொண்டிருந்த படகில் இருந்து 6 மீனவர்கள் மீட்கப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று காலை கடற்படையினர் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின்போதே இவர்கள் காப்பாற்றப்பட்டனர்.

பேருவளை கலங்கரை விளக்கத்தில் இருந்து சுமார் 8 கடல் மைல் தொலைவில், மோசமான வானிலை காரணமாக படகு மூழ்கிக் கொண்டிருந்த வேளையில் இந்த மீனவர்கள் மீட்கப்பட்டனர்.

பல நாட்களாக மீனவர்கள் தத்தளித்திருந்த நிலையில் கடற்படையினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

கொழும்பு, மே 15

நாட்டில் நிலவும் மழையுடனான வானிலை காரணமாக மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

காலி, இரத்தினபுரி மற்றும் களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நிலம் தாழிறங்கல், கற்பாறை சரிதல், மண்மேடு சரிதல், நிலத்தில் வெடிப்பு ஏற்படுதல் ஆகிய தன்மைகள் தொடர்பில் அவதானத்துடன் இருக்குமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக வீசும் பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை குறைத்துக் கொள்ள போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

அத்துடன், மறு அறிவித்தல் விடுக்கும் வரை வங்காள விரிகுடா கடற்பகுதிக்கு செல்ல வேண்டாம் என மீனவர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# விலை குறைக்கப்பட்ட பால்மா முதலில் மேல் மாகாணத்துக்கு!

கொழும்பு, மே 15

விலை குறைக்கப்பட்டுள்ள பால் மாவை முதலில் மேல் மாகாணத்துக்கு விநியோகிக்கவுள்ளதாகவும் அதன் பின்னரே ஏனைய மாகாணங்களுக்கு வழங்கப்படுமென பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

200 ரூபாயாக குறைக்கப்பட்ட விலைகள் அடங்கிய லேபிள்கள் நேற்றைய தினம் பால் மா பொதிகளில் பொறிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சங்கத்தின் உறுப்பினர் லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இன்று தொடக்கம் ஒரு கிலோகிராம் பால் மாவின் விலை 200 ரூபாயால் குறைக்கப்படும் என அண்மையில் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்திருந்தார்.

எனினும் ஒப்பந்தம் செய்யப்பட்ட பால் மா கப்பலின் தாமதத்தால் புதிய விலையில் பால் மாவை நுகர்வோருக்கு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக இறக்குமதியாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# சீனாவின் செல்வாக்கு உயர்வால் கவலைக்கிடமான நிலையில் இலங்கை

## பிரிட்டன் இராஜாங்க அமைச்சர்

லண்டன், மே 15

**இலங்கையின் கடன்பேண்தகு தன்மை சீனாவின் அரசியல், பொருளாதார செல்வாக்கு குறித்த விடயங்கள் குறித்து நாங்கள் கவலை கொண்டுள்ளோம் - என்று பிரிட்டனின் வெளியுறவு பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலக இராஜாங்க அமைச்சர் அன்ட்ரூ மிட்செல் தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் நிலைமை மோசமடைவதை உணர்ந்த பிரிட்டன் அதிகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக 300 கோடி டொலர்களை வழங்கியது. குறைந்த வருமானம் உழைக்கும் நாட்டுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவது வழமைக்கு மாறான சட்டங்கள் என்ற போதிலும் இந்த உதவி இலங்கை எதிர்கொண்டிருந்த பொருளாதார நெருக்கடியின் பாரதூர தன்மையையும் அவசர நிலையையும் வெளிப்படுத்திய துடன் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான உறவுகளையும் வெளிப்படுத்தியுள்ளது.

இந்த நெருக்கடிக்கான அடிப்படை காரணங்களுக்கு தீர்வை காண்பதற்கும் கடன்பேண்தகு தன்மை பொருளாதார மீட்சி ஆகியவற்றை உறுதி செய்வதற்கும் சர்வதேச சமூகங்களுடன் இணைந்து பிரிட்டன் செயல்படுகின்றது. நாங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கையின் பொருளாதார கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்களுக்கு ஆதரவளிக்கும் நான்கு வருடங்களுக்கு 3000 மில்லியன் டொலர் ஆதரவை நாங்கள் வரவேற்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்போம். இந்த பேச்சுகளில் ஆக்கபூர்வமாக கலந்துகொள்ளுமாறு அனைத்து கடன்வழங்குநர்களையும் கேட்டுக்கொள்கின்றோம் எனவும் எனவும் அன்ரூமிட்ச்செல் தெரிவித்துள்ளார்.



எனது நணபர் சீனா குறித்து கேள்விஎழுப்பினார் நான் இந்த கேள்விக்கு தெளிவாக பதில் அளிக்க விரும்புகின்றேன்,

மூன்றாம் உலகின் எந்த நாட்டுக்கும் உதவி, வர்த்தகம் மற்றும் முதலீடு போன்ற விடயங்களில் சீனா ஒரு முக்கியமான நாடு - புதிய பட்டுப்பாதை திட்டம் உட்பட சீனாவின் முதலீடுகள் ஏனைய உட்கட்டமைப்பு முதலீடுகளுடன் சர்வதேச உட்கட்டமைப்பு இடைவெளியை நிரப்புவதற்கு உதவக்கூடும். ஆனால், கடன்பேண்தகு தன்மை சீனாவின் அரசியல், பொருளாதார செல்வாக்கு குறித்த விடயங்கள் குறித்து நாங்கள் கவலை கொண்டுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கான இலங்கையின் கடனின் தன்மை சிக்கலானது மற்றும் மாறுபட்டது. மேலும் கடன் விவகாரங்களுக்கு தீர்வை காண்பதற்கு கடந்த காலங்களில் சீனா உதவ தயங்கியமை கரிசனை அளிக்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் 90 வீதத்தை நீதியமைச்சே முடித்தது!

## நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, மே 15

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் நூற்றுக்கு 90 சதவீதமான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் நீதி அமைச்சாலேயே முன்னெடுக்கப்பட்டன. ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு அவசியமான சட்டங்கள், தகவல் அறியும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான சட்டம், ஊழல் மோசடிகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான சட்டங்களை நாமே தயாரித்தோம் என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்‌ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதி அமைச்சு அதிகாரிகளுடனான கூட்டம் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடந்த அந்தக் கூட்டத்தில், "நாம் அனைவரும் ஒவ்வொரு மட்டத்திலிருந்து நாட்டு மக்களுக்கு சேவையாற்றி வருகிறோம். நாம் வகிக்கும் பதவியும், எமக்குரிய பொறுப்புக்களும் வேறுபடலாம். இருப்பினும், எம் அனைவரினதும் இலக்கு ஒன்றுதான்.

நாடு என்ற ரீதியில் நாம் அபிவிருத்தி அடைய வேண்டுமானால், முதலில் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்த வேண்டும். சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்படாததன் விளைவாக தங்கச் சுரங்கங்களைக் கொண்ட பல ஆபிரிக்க நாடுகளால் இன்னமும் அபிவிருத்தி அடைய முடியவில்லை. தற்போது நாமும் அந் நாடுகளை ஒத்த நிலையிலேயே இருக்கின்றோம்.

எமது நாட்டில் இல்லாத வளம் என்று எதனையும் கூறமுடியாது. எம்மிடம் உள்ள வளங்கள் இந்தியாவில் கூட இல்லை. இருப்பினும், நாம் இன்னமும் உரிய இடத்தை அடையவில்லை. ஜப்பான், கொரியா, தாய்லாந்து, சிங்கப்பூர் போன்ற நாடுகள் பொருளாதார ரீதியில் எம்மை விடவும் பின்னடைவான நிலையிலேயே இருந்தன. அந்நாடுகளின் தலா வருமானம் எமது நாட்டை விட குறைவான மட்டத்திலேயே காணப்பட்டன.

கல்வியறிவு வீதம், சிசு மரண வீதம், கர்ப்பிணித்தாய்மாரின் மரணவீதம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்து எமது நாடு முன்னேற்றகரமான மட்டத்தில் உள்ளது.

எது எவ்வாறிருப்பினும், பொருளாதார நெருக்கடியின் விளைவாக சர்வதேச நாணய நிதியத்திடம் கடனுதவி பெற வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெறுவதென்பது ஏனைய நாடுகளுக்கு இலகுவானதொரு விடயமாக இருக்கவில்லை. இருப்பினும், இலங்கையை பொறுத்தமட்டில் நிதியமைச்சும் திறைசேரியும் மிகச் சரியாக செயற்பட்டு, இந்தக் கடனுதவிக்கான இணக்கப்பாட்டை எட்டியிருக்கின்றன என்ற எண்ணம் மக்கள் மத்தியில் நிலவுகின்றது. ஆனால், இவ்விடயத்தில் நீதியமைச்சு சரியாக செயற்பட்டிருக்காவிட்டால் இந்த இணக்கப்பாட்டை எட்டுவதில் மேலும் ஒரு வருட கால தாமதம் ஏற்பட்டிருக்கும் என்ற விடயம் மக்களுக்குத் தெரியாது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் நூற்றுக்கு 90 சதவீதமான நிபந்தனைகளை பூர்த்திசெய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் நீதியமைச்சினாலேயே முன்னெடுக்கப்பட்டன.

அதேபோன்று எமது நாடு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இழந்திருந்த காலப்பகுதியில், அதனை மீளப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான நிபந்தனைகளில் நூற்றுக்கு அறுபது சதவீதமான நிபந்தனைகள் எமது அமைச்சினாலேயே நிறைவேற்றப்பட்டன - என்றார். (ஐ)

# வாக்காளர் பட்டியலுக்கான தகவல் திரட்டல் ஆரம்பம்!

கொழும்பு, மே 15

இந்த ஆண்டு வாக்காளர் பட்டியலை திருத்தும் நோக்கத்தில் கிராம சேவகர்கள் வீடு வீடாகச் சென்று தகவல்களை சேகரிக்கத் தொடங்கியுள்ளனர் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கோவிட் தொற்று பரவலால் முன்னர் இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில், வீடு வீடாக சென்று தகவல்களை சேகரிக்கும் முறைமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிராம சேவகர்கள் வீடுகளுக்குச் செல்லும்போது பொதுமக்கள் வீட்டில் இல்லை என்றால், உடனடியாக கிராம சேவகர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணைக்குழு மக்களுக்குத் தெரிவித்துள்ளது.

அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதாகவும், அதற்காக இம்முறை வாக்காளர் பட்டியல் திருத்தத்தில் பெயர் இடம்பெறுவது மிகவும் முக்கியமானது எனவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

ஒக்ரோபர் 31 ஆம் திகதிக்குள் வாக்காளர் பதிவுப் பணியை முடிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

# பூஸாவில் முக்கிய குற்றவாளிகளை கண்காணிக்கும் கமெரா செயலிழப்பு

கொழும்பு, மே 15

பூஸா சிறைச்சாலையின் பெரும் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் அடைக்கப்பட்டுள்ள சில அறைகளில் பொருத்தப்பட்டிருந்த சி. சி. ரீ. வி. கமெராக்கள் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சிறைச்சாலையில் பொருத்தப்பட்டுள்ள 120 கமெராக்களில் சுமார் 20 கமெராக்கள் தற்போது செயல்படாமல் இருப்பதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வெலே சுதா, தெமட்டகொட சமிந்த, பொடி லெஸி உள்ளிட்ட பெரும் குற்றவாளிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள பல சிறைச்சாலை அறைகளின் சி. சி. ரீ. வி. கமெராக்களே செயல்படாவிடாது தடுக்கப்பட்டுள்ளன.

# மாத்தறை மாவட்டத்துக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

கொழும்பு, மே 15

மாத்தறை மாவட்டத்திலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பெய்து வரும் பலத்த மழை காரணமாக நில்வள கங்கை தற்போது நிரம்பி வழிகிறது.

இதனை கருத்தில் கொண்டு நேற்று நீர்ப்பாசனத் திணைக்களம் வெள்ள அபாய அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதன்படி, கொட்டபொல, பிடபெத்தர, அக்குரஸ்ஸ, அத்துரலிய, மாலிம்பட மற்றும் தெவிநுவர ஆகிய பிரதேசங்களில் நில்வள கங்கை அண்மித்த தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், மக்களை அவதானமாக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# கைவிடப்பட்ட வீட்டில் உறங்கியவர் கோடரியால் கொத்தப்பட்டு கொலை!

கொழும்பு, மே 15

கைவிடப்பட்ட வீட்டில் தனியாகக் உறங்கிக் கொண்டிருந்த நபர் ஒருவர் சிலரால் கோடரியால் கொத்திக் கொலை செய்யப்பட்டார் என்று தெரியவருகின்றது.

நேற்று காலை கம்பஹா - முதுன்கொட பிரதேசத்தில் வசித்து வந்த 32 வயதான துசித குமார என்ற நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

குறித்த நபர் அப்பகுதியில் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவராக குற்றம் சுமத்தப்பட்டவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர், கைவிடப்பட்ட வீடொன்றில் உறங்கிக் கொண்டிருக்கும் போது ஒரு குழுவினரால் கொலை செய்யப்பட்டார். சம்பவம் தொடர்பில் அப்பகுதியைச் சேர்ந்த இருவர் விசாரணைகளுக்காக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கர்நாடக தேர்தல் தோல்வி:

## “பா..ஜ..க. பாடம் கற்காது”

## இந்து என். ராம் பேட்டி!

முரளிதரன் காசி விஸ்வநாதன்

கர்நாடக மாநில சட்டப்பேரவை தேர்தலில் பெரும்பான்மை பலத்துடன் காங்கிரஸ் கட்சி ஆட்சியமைக்க தகுதி பெற்றுள்ளது. அந்த கட்சியின் வெற்றி, பா.ஜ.கவின் தோல்விக்கான காரணம், இந்த தேர்தல் முடிவு ஏற்படுத்தப்போகும் தாக்கம் ஆகியவை குறித்து பேட்டியளித்தார் தி இந்து குழுமத்தின் இயக்குநர்களில் ஒருவரும் மூத்த பத்திரிகையாளருமான என். ராம். அவரது பேட்டியில் இருந்து.

கே. கர்நாடக தேர்தல் முடிவுகளில் காங்கிரஸ் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்று வருகிறது. இது குறித்த உங்கள் கருத்து என்ன?

ப. காங்கிரசை பொறுத்தவரை இது மிகப் பெரிய வெற்றி. காங்கிரஸ் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மோசமான நிலையில் இருப்பதாகச் சொல்லப்படும் நேரத்தில், இந்த வெற்றி அவர்களுக்கு ஊக்கமளிக்கும். இது தானாக நடக்கவில்லை. இதற்காக கடுமையாக வேலை செய்தார்கள். கர்நாடகத்தில் இருந்த பா.ஜ.க. அரசு செயல்படாத அரசு என்ற பெயர் வாங்கியிருந்ததால், ஆட்சிக்கு எதிரான மனநிலை இருந்தது. அதே நேரம், காங்கிரஸ் கட்சியில் பல பிளவுகள் இருந்தன. காங்கிரஸ் வெற்றிபெற்றால் யார் முதல்வர், யாருக்கு என்ன பதவி என்ற போட்டிகளோடு, ஜாதி ரீதியான பிளவுகளும் இருந்தன. அப்படியிருந்தும் ஒரு ஒற்றுமையை ஏற்படுத்தி வெற்றிபெற்றிருக்கிறார்கள். இது காங்கிரஸ் தலைமைக்குக் கிடைத்த வெற்றி.

கர்நாடக மாநில காங்கிரசில் சித்தராமையா, டி.கே. சிவகுமார் என இரண்டு பெரிய தலைவர்கள் இருக்கிறார்கள். சித்தராமையா மிக செல்வாக்கு மிக்கவர். சிவகுமாரைப் பொறுத்தவரை அவர் கடுமையாக பணியாற்றக்கூடியவர். இருவரும் ஒன்றிணைந்து செயல்பட்டார்கள். இந்த வெற்றியில் தலைவர் மல்லிகார்ஜூன கார்கேவுக்கு பெரிய பங்கு உண்டு. பிரியங்கா காந்தி, ராகுல் காந்தி ஆகியோரும் கடுமையாக பிரச்சாரம் செய்தார்கள். பாரத் ஜோடா யாத்திரையின் தாக்கம் இந்தத் தேர்தலில் நிச்சயமாக இருக்கிறது. உள்ளே இருக்கக்கூடிய முரண்பாடுகளை சமாளித்து, இவ்வளவு தீவிர பிரசாரம் செய்து வெற்றி பெற்றது பெரிய சாதனை தான். ஆகவே, இது ஊக்கமளிக்கக்கூடிய, மகத்தான வெற்றி.

தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்பில் எல்லோருமே காங்கிரஸ் பக்கம் தான் வெற்றி இருக்கும் என சொன்னார்கள். குறிப்பாக இந்தியா டுடே - ஆக்ஸிஸ் கருத்துக் கணிப்பு கிட்டத்தட்ட சரியாக இருந்தது எனச் சொல்லலாம். காங்கிரசைப் பொறுத்தவரை சுமார் **43** சதவீத வாக்குகளைப் பெற்றிருக்கிறது. இது இந்திய தேர்தல் போக்குகளை வைத்துப் பார்த்தால், இது குறிப்பிடத்தக்க சதவீதம். பா.ஜ.க. சுமார் **36** சதவீத வாக்குகளையே பெற்றிருக்கிறது. பா.ஜ.கவின் வாக்கு சதவீதம் மிகவும் குறையவில்லை என்றாலும் இரு கட்சிகளுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்திருக்கிறது. **7** சதவீத முன்னணி என்பது காங்கிரசிற்கு பெரிய வெற்றி.

கே. காங்கிரஸ் வெற்றி பெற்றிருக்கும் நிலையில், முதல்வர் யார் என்பது குறித்து சித்தராமையாவுக்கும் டி.கே. சிவகுமாருக்கும் இடையில் முரண்பாடுகள் வர வாய்ப்புள்ளதா?

ப. இது காங்கிரசிற்கு சவால்தான். ஆனால், அதன் மேலிட தலைவர்கள் சமாளித்து விடுவார்கள். சித்தராமையா பிரபலமான, செல்வாக்குமிக்க தலைவர். நான் சிலரோடு சேர்ந்து சென்று இந்தத் தலைவர்களைச் சந்தித்தேன். அப்போது, டி.கே. சிவகுமாரை ஒரு நாள் விட்டு ஒரு நாள் சந்தித்துப் பேசுவதாகச் சொன்னார். அது உண்மைதான். இப்போதைய சூழலில் சித்தராமையாதான் முதல்வராவார். ஆனால், கடினமாக உழைத்த டி.கே. சிவகுமாருக்கும் ஏதாவது பதவி வழங்க வேண்டும். அவர் நிறைய தியாகங்களைச் செய்திருக்கிறார். சிறையில் அடைக்கப்பட்ட போது கூட, எந்த ஊசலாட்டமும் இல்லாமல் காங்கிரஸ் பக்கம் நின்றார். அவருக்கு பதவி கிடைக்கவில்லையென்றால் அவரது ஆதரவாளர்களுக்கு வருத்தம் நேரும். ஆனால், இன்னும் ஒற்றுமையாகச் செயல்படுவார்கள் என நினைக்கிறேன்.





கே. பாரதிய ஜனதா கட்சி தோற்கும் போதெல்லாம், “ஆபரேஷன் கமல்”, “ஆபரேஷன் லோட்டஸ்” போன்ற நடவடிக்கைகளின் மூலம் ஆட்சியைப் பிடிப்பது குறித்துப் பேசுவார்கள். இப்போது அந்த வாய்ப்பு இருக்கிறதா?

ப. வாய்ப்பே இல்லை. **224** இடங்களில் காங்கிரஸ் **136** இடங்களைப் பெற்றிருக்கிறது. அதைத்தவிர மதசார்பற்ற ஜனதா தளமும் பல இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறது. பா.ஜ.க வெறும் **64** இடங்களை வைத்துள்ளது. எனவே அங்கு தாமரையால் மீண்டும் மலர முடியாது. இவ்வளவு குறைவான இடங்களைப் பெற்ற பிறகு, பழையபடி செய்ய மாட்டார்கள் என நினைக்கிறேன். அப்படிச் செய்தால், அதற்குப் பதிலடி இருக்கும். மக்கள் மத்தியில் அசிங்கமாகிவிடும். மீறிச் செய்தால் பாதிப்பை ஏற்படுத்தும். இருவருக்கும் இடையில் தொகுதிகள் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருந்தால் அத்தகைய முயற்சியில் ஈடுபடலாமே தவிர, குறைவான எண்ணிக்கை இருக்கும்போது அப்படி செய்ய முடியாது. அது மோசமான அரசியல் நடவடிக்கையாக இருக்கும்.

கே. பா.ஜ.க. இந்துத்துவத்தை முன்வைத்து தேர்தலை சந்தித்தது. காங்கிரஸ் ஊழலை முன்வைத்து தேர்தலைச் சந்தித்தது. தற்போது காங்கிரஸ் வெற்றிபெற்றிருக்கும் நிலையில், பா.ஜ.கவின் இந்துத்துவத்தை கர்நாடக மக்கள் நிராகரித்துவிட்டதாகச் சொல்ல முடியுமா?

ப. நிச்சயமாகச் சொல்ல முடியும். பிரதமர் மோடிகூட அங்கு செல்லும்போது அனுமானைப் பற்றி கோஷம் எழுப்பினார். இது தேர்தல் விதிகளுக்கே எதிரானது. உள்ளூர் பிரச்சனைகள்தான் முக்கியமானவை என எல்லோரும் சொன்னாலும் அவர்களால் அவர்கள் சித்தாந்தத்திலிருந்து தப்ப முடியவில்லை. ஆகவே இந்தத் தோல்வி இந்துத்துவ சித்தாந்தத்தின் தோல்விதான்.

அதேபோல, தென்னிந்தியா முழுவதுமே பா.ஜ.க. ஆட்சியில் இல்லாமல் ஆகியிருக்கிறது. பல தசாப்தங்களாக கரநாடகம் வேறு மாதிரி இருக்கும். இப்போது **64** இடங்களாக சுருங்கியிருப்பது மிக மோசமான தோல்விதான். இந்துத்துவத்திற்கு எதிராக கடுமையான சுவர் தென்னிந்தியாவில் எழுப்பப்பட்டது. காங்கிரஸ் இதற்காக கடுமையாகப் பணியாற்றியது. காங்கிரஸ் தலைவர்கள் சிறப்பாக பிரசாரம் செய்தார்கள். பெங்களூருவில் மட்டுமே பிரதமர் மோதியின் பிரசாரத்திற்கு பலன் கிடைத்திருக்கிறது. பா.ஜ.கவின் அரசியலை இப்போதைக்கு மக்கள் நிராகரித்திருக்கிறார்கள். ஆனால், இதை வைத்து மக்களவைத் தேர்தல் முடிவுகள் எப்படியிருக்குமெனச் சொல்ல முடியாது.

கே. இந்தத் தேர்த லில் பி.எல். சந்தோஷ் எல்லா முடிவுகளையும் எடுத்தார் பசவராஜ் பொம்மை தலைமை யில் அரசு இருந்தது. பிரதமர் மோதி கடு மையாக பிரசாரத்தில் ஈடுபட்டார் - இப் போது யார் இந்தத் தோல்விக்கு பொறுப்பேற்பது?

ப. முழு கட்சியும் தான் பொறுப்பேற்க வேண்டும். எல்லோரும் சேர்ந்து தான் செயல்படுகிறார்கள். ஆனால், அங்கிருந்த அரசின் போக்குதான் முக்கியமான கார ணம். அந்த அரசை மக்களுக்குப் பிடிக்கவில்லை. மத்திய தலைமைக்கும் இந்தத் தோல்வியில் ஒரு பங்கு உண்டு. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், பா.ஜ.கவை மக்களுக்குப் பிடிக்கவில்லை. தொங்கு சட்டமன்றம் வரும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், அப்படி நடக்கவில்லை.

கே. இந்த தேர்தல் முடிவுகள் வரவிருக்கும் தேர்தல்களில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும்?

ப. வரவிருக்கும் தேர்தல்களுக்கு இது ஒரு குறியீடாகச் சொல்லலாம். ஆனால், மக்களவை தேர்தலைப் பொறுத்தவரை அது அகில இந்திய அளவில் நடக்கும் என்பதால், இதே போன்ற முடிவுகளை எதிர்பார்க்க முடியாது. பல மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல் முடிவுகளும் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளும் வெவ்வேறுவிதமாக இருக்கும். இந்தத் தேர்தல் தோல்வியை வைத்து, தென்னிந்தியாவில் பா.ஜ.கவுக்கு எதிரான அலை இருப்பதாகச் சொல்லலாம்.

காங்கிரசைப் பொறுத்தவரை, கூட்டணிகளைச் சரியாகக் கையாள வேண்டும். கூட்டணியைச் சரியாக எடுத்துச் செல்லும் போக்கு, காங்கிரசில் குறைந்துவிட்டது. சோனியா காந்தி காங்கிரஸ் தலைவராக இருக்கும்போது அதைச் சிறப்பாகச் செய்தார். மதச்சார்பற்ற அரசியலை ஜனநாயக பூர்வமாக எடுத்துச் சென்றார். இப்போது அப்படியிருக்குமா என்பதைப் பார்க்க வேண்டும்.



கூட்டணியைப் பொறுத்தவரை, ராகுல் காந்திக்கு வேறு பார்வை இருப்பதாக இருக்கிறது. உதாரணமாக உத்தர பிரதேசத்தில் பா.ஜ.கவுக்கு எதிரான பெரிய கட்சியாக சமாஜ்வாதி கட்சிதான் இருக்கிறது. ஆனால், அவர்களுக்கு எதிராக காங்கிரஸ் பிரசாரம் செய்கிறது. ஆட்களை நிறுத்துகிறது. இந்தப் போக்கை மாற்றிக்கொண்டால், காங்கிரஸ் முக்கியமான சக்தியாக மீண்டும் உருவெடுக்கும்.

கர்நாடக மாநிலத்தில் மூன்றாவது இடத்தைப் பிடித்த மதச்சார்பற்ற ஜனதா தளத்துடன் நட்புணர்வைப் பேண வேண்டும்.

கே. அடுத்தாக ராஜஸ்தான், மத்தியப் பிரதேச சட்டமன்றத் தேர்தல்கள் இருக்கின்றன. கர்நாடகத் தேர்தல் வெற்றி, தேர்தல்களை எதிர்கொள்வது பற்றிய ஒரு பாடத்தை காங்கிரசிற்குத் தந்திருப்பதாகச் சொல்லலாமா?

ப. நிச்சயம் சொல்லலாம். மத்தியப் பிரதேசத்தில் காங்கிரசிற்கு வாய்ப்பிருக்கிறது. ராஜஸ்தானில் ஆட்சிக்கு எதிரான மன நிலை எப்படியிருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனாலும் கட்சி அங்கே பலமாகத்தான் இருக்கிறது. அசோக் கெலாட்டுடன் சச்சின் பைலட்டிற்கு முரண்பாடுகள் இருந்தாலும் அவர் கட்சியைவிட்டு வெளியேறவில்லை. ஆனால், பா.ஜ.க. அங்கு ஒரு பலம்வாய்ந்த சக்தி என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

கே. இந்தத் தேர்தல் முடிவுகள் பா.ஜ.கவுக்கு என்ன படிப்பினையைத் தந்திருக்கின்றன?

ப. அவர்கள் எந்தப் படிப்பினையையும் எடுத்துக்கொள்ள மாட்டார்கள். நாங்கள் எதிர்காலத்தை மனதில் கொண்டு செயல்படுவதாகச் சொல்வார்கள். செயல்படும் விதத்தை மட்டும் மாற்றிக்கொள்வார்கள். இந்துத்துவம், இந்து ராஷ்ட்டிரம் போன்ற சித்தாந்தங்களை விடமாட்டார்கள். ஜனநாயக அமைப்புகளை எப்படி செயல்படாமல் செய்ய முடியும் என்பதைப் பார்ப்பார்கள்.

உச்ச நீதிமன்றம் சமீபத்தில் தேர்தல் ஆணையம், சபாநாயகர், ஆளுநர் குறித்தெல்லாம் சமீபத்தில் பல முக்கியத் தீர்ப்புகளைத் தந்திருக்கிறது. மக்களும் நீதிமன்றமும் இவர்களது தவறான போக்கை தடுக்க வேண்டும். ஆனால், அது நடக்கவில்லை. இப்போது நீதிமன்றத்தில் இது நடக்க ஆரம்பித்திருக்கிறது. ஒரு மதசார்பற்ற, ஜனநாயக குடியரசில் அரசியலமைப்பின் பங்கை பல தீர்ப்புகள் சுட்டிக்காட்டியிருக்கின்றன. அவை வரவேற்கத்தக்கவை.

பா.ஜ.க தலைவர்களைப் பொறுத்தவரை, “உச்ச நீதிமன்ற தடை” இருந்தால் சற்று பின்வாங்குவார்கள். அந்தத் தடை நீங்கிய பிறகு மறுபடியும் தங்கள் பாதையில் செல்வார்கள். ஆகவே எந்தப் படிப்பினையும் அவர்கள் பெற மாட்டார்கள்.

அடுத்த **15-20** ஆண்டுகளை மனதில் வைத்துத்தான் செல்படுகிறோம் என அமித் ஷா சொல்லியிருக்கிறார். ஆகவே, இந்தத் தோல்வியை எல்லாம் அவர்கள் கணக்கில் கொள்ள மாட்டார்கள்.

(பிபிசி)

# காணாமல்போன யுவதியின் சடலம் புதைகுழியில் கண்டுபிடிப்பு!

## நடந்தது என்ன?

கம்பளை - வெலிகல்ல - எல்பிட்டிய பகுதியில் கடந்த ஒரு வாரமாக காணாமல் போனதாக தேடப்பட்டு வந்த யுவதியின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

எல்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 22 வயதான பாதிமா முனவர் என்ற யுவதி, கடந்த 7ம் தேதி காலை காணாமல் போயிருந்தார்.

பேராதனை - கெலிஓய பகுதியிலுள்ள மருந்தகமொன்றில் இந்த யுவதி பணிப்புரிந்து வந்துள்ளார்.

இந்த நிலையில், எல்பிட்டிய பகுதியிலுள்ள தனது வீட்டிலிருந்து கெலிஓய பகுதியிலுள்ள தனது வேலைத்தளத்திற்கு கடந்த 7ம் தேதி காலை குறித்த யுவதி சென்றுள்ளார்.

தனது வீட்டிலிருந்து சுமார் 150 மீட்டர் தொலைவிலுள்ள பள்ளிவாசல் வளாகத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமராவில் இந்த யுவதி செல்லும் காணொளி பதிவாகியிருந்தது.

எனினும், அதனை அடுத்துள்ள எந்தவொரு சி.சி.டி.வி கமராவிலும் இந்த யுவதி பயணித்தமைக்கான ஆதாரங்கள் பதிவாகியிருக்கவில்லை.

பள்ளிவாசல் வளாகத்தில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி கமராவில் பதிவான காட்சிகளின் அடிப்படையில், குறித்த யுவதி பயணிக்கும் தருணத்தில் அவருக்கு பின்னால் இளைஞன் ஒருவன் செல்லும் விதம் பதிவாகியிருந்தது.

அதேவேளை, அந்த சந்தர்ப்பத்தில் அந்த வீதியூடாக பயணித்த முச்சக்கர வண்டி ஒன்றும் பதிவாகிய நிலையில், இந்த இளைஞன் மற்றும் முச்சக்கரவண்டி தொடர்பில் பிரதேசத்தில் சந்தேகம் நிலவியது.

அதே பிரதேசத்தைச் சேர்ந்த ஆடு வளர்ப்பில் ஈடுபடும் இளைஞன் தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டது.

எல்பிட்டிய பகுதியானது, பெருமளவில் மக்கள் நடமாட்டம் குறைவான பகுதியாகும்.

குறித்த யுவதிக்கு பின்னால் சென்ற இளைஞனுக்கும், யுவதிக்கும் இடையில் சுமார் 50 மீட்டர் வித்தியாசமே காணப்பட்டமையினால், இந்த யுவதி காணாமல் போனமை குறித்து ஏதோ ஒரு விடயம் இளைஞன் அறிந்திருப்பான் என்ற சந்தேகம் நிலவியது.

**சரண் அடைந்த இளைஞர்**

இந்த நிலையில், அன்றைய தினம் இரவு குடும்பத்தினர் கம்பளை பொலிஸ் நிலையத்தில் முறைபாடொன்றை பதிவு செய்திருந்தனர்.

> **“நான் செய்தது தவறு தான். அந்த போதையை பயன்படுத்தாமல் இருக்கும் போது தான் அது தெரிகின்றது. நான் செய்தது எவ்வளவு பெரிய தவறு என்று இப்போது தான் தெரிகின்றது. எல்லாரும் என்னை மன்னித்துக்கொள்ளுங்கள்.”**

அதையடுத்து, பொலிஸார் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து குறித்த பகுதியின் இரு புறத்திலும் உள்ள காட்டு பகுதிக்குள் தேடுதல்கள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும், எந்தவொரு தடயத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த நிலையில், யுவதிக்கு பின்னால் சென்ற குறித்த இளைஞன், கம்பளை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்திருந்தார்.

இந்த யுவதியை தானே கொலை செய்து, புதைத்துள்ளதாக தெரிவித்து, குறித்த இளைஞன் சரணடைந்திருந்தார்.







இதையடுத்து, குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார், சந்தேகநபர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் தேடுதல்களை முன்னெடுத்திருந்தனர்.

பள்ளிவாசல் வளாகத்திலிருந்து பிரதான வீதியூடாக சுமார் 500 மீட்டர் தொலைவிலுள்ள காட்டுப் பகுதிக்குள், பிரதான வீதியிலிருந்து சுமார் 50 மீட்டரில் சடலம் புதைக்கப்பட்டுள்ளமைக்கான ஆதாரங்களை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

குழியொன்று தோண்டப்பட்டு, சடலம் புதைக்கப்பட்டமைக்கான தடயங்களை பொலிஸார் அவதானித்தனர்.

அதேவேளை, குறித்த யுவதியுடையது என சந்தேகிக்கப்படும் பாதணியொன்றும், தண்ணீர் போத்தல் ஒன்றும் அந்த இடத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து, பிரதேசத்தில் சில மணிநேரம் அமைதியின்மை நிலவியது.

சந்தேகநபரை தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரி பிரதேச மக்கள் அமைதியின்மையை ஏற்படுத்தியிருந்தனர்.




எனினும், பொலிஸார் பிரதேச மக்களை சமாதானப்படுத்தி, நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

இந்த நிலையில், நீதவான் முன்னிலையில் குறித்த பகுதி தோண்டப்பட்டு, யுவதியின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சடலம் நீதவான் விசாரணைகளின் பின்னர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

**சந்தேக நபரின் வாட்ஸ்அப் தகவல்**

குறித்த பகுதியைச் சேர்ந்த ஆடு வளர்ப்பில் ஈடுபடும் 24 வயதான இளைஞனே இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் சரணடைவதற்கு முன்னர் பிரதேச மக்களுக்கு வாட்ஸ்அப் ஊடாக, குரல் பதிவொன்றை அனுப்பியுள்ளார்.

தான் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளமையே, இந்த கொலையை செய்வதற்கான காரணம் என அந்த குரல் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“நான் நன்றாக தான் இருந்தேன். வாகனங்களுக்கு பெயின்ட் அடிப்பது தான் எனது வேலை. கடைசியில் எனது நிலைமை என்னவென்றால், நான் போதைக்கு அடிமையாகி விட்டேன். எங்க ஊரில் போதைப்பொருள் இருக்கின்றது. ஊரிலுள்ள அதிகளவானோர் போதையில் தான் இருப்பார்கள். யார் யார் என்பதை நான் சொல்லுவேன். எனது வாழ்க்கை சீரழிவதற்கு அவர்கள் தான் காரணம். அவர்கள் கொண்டு வந்ததனால் தான் அந்த அதை குடித்தேன். நான் அதை பாவித்து பாவித்து, எனது மூளை வத்தி போனது. இந்த போதைப் பொருளினால் தான் எனது வாழ்க்கை சீரழிந்தது. நான் இப்போது கொலைகாரனாகி விட்டேன்.

அன்றைக்கு என்ன நடந்தது என்றால், நான் புல் வெட்ட போயிருந்தேன். போதைப்பொருள் பயன்படுத்தியே சென்றேன். என்ன செய்தேன் என்றே விளங்கவில்லை. வீதியில் சென்ற இந்த பிள்ளையிடம் பணம் கேட்டேன். அந்த பிள்ளை கத்தினாள். அப்போது கழுத்தை பிடித்து நசுக்கினேன். கீழே வீழுந்தார். எனது முகத்தை பிச்சு எடுத்தாள். கடைசியில் எனது கையால் அந்த பிள்ளையின் உயிர் போக வேண்டிய நிலைமை வந்தது. கடைசியில் அந்த இடத்திலேயே குழியொன்றை தோண்டி, அந்த இடத்திலேயே புதைத்து விட்டேன்.

நான் செய்தது தவறு தான். அந்த போதையை பயன்படுத்தாமல் இருக்கும் போது தான் அது தெரிகின்றது. நான் செய்தது எவ்வளவு பெரிய தவறு என்று இப்போது தான் தெரிகின்றது. எல்லாரும் என்னை மன்னித்துக்கொள்ளுங்கள்.” என சரணடைந்த இளைஞன் தெரிவித்துள்ளார்.

**போலீஸாரின் பதில்**

குறித்த இளைஞன் இந்த யுவதியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயற்சித்த வேளையில், அதனை நிராகரித்தமையினால் இந்த கொலையை செய்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட போலீஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவிக்கின்றார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

குறித்த யுவதியை பலவந்தமாக அருகாமையிலுள்ள காட்டுப் பகுதிக்குள் இழுத்து சென்று, அந்த இளைஞன் கொலை செய்ததாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு கொலை செய்யப்பட்ட யுவதியை, அதே இடத்தில் புதைத்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவிக்கின்றார்.

# 34 லீற்றர் கசிப்புடன் நான்கு பேர் கைது!

மட்டக்களப்பு, மே 15

34 லீற்றர் கசிப்புடன் பெண் உட்பட நால்வரை கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் பொறுப்பதிகாரி எச். எம். சியாம் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நொச்சிமுனையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறியின் வழிகாட்டலில் மாவட்ட இரகசிய தகவல் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய சனிக்கிழமை இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நடவடிக்கையின் போது நீர் நிலைக்குள் மறைத்து வைக்கப்பட்ட 34 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது. அத்துடன், பெண் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 14 இலட்சம் மாணவர்கள் காலை உணவு உண்பதில்லை!

## காமினி வலேபொட எம். பி.

கொழும்பு, மே 15

பாடசாலை மாணவர்களில் மூன்றில் ஒரு பங்கினருக்கு அதாவது, 14 இலட்சம் வரையான மாணவர்கள் போதியளவில் காலை உணவை உண்பதில்லை என்று பாராளுமன்ற உறுப்பினரும் துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவருமான காமினி வலேபொட சுட்டிக்காட்டியுள்ளார்.

காலையில் எந்தவோர் உணவையும் உட்கொள்வதில்லை என்பது மருத்துவ பரிசோதனை தகவல்களின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. இது பொருளா தார பாதுகாப்பால் ஏற்பட்டிருக்கும் அழுத்தமாகும்.

காலை உணவைத் தவிர்ப்பது குழந் தைகளின் மூளை மற்றும் உடல் வளர்ச் சியில் மிகவும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் இது சோதனைகள் மூலம் உறுதியாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)

# தமிழர் அபிலாசைகளை நிறைவேற்றும் நியாயமான தீர்வைப் பெற வேண்டும்!

## இரா. சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, மே 15

தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் தேசிய இனப்பிரச்னைக்கு நியாயமான தீர்வைப் பெற வேண்டும் என்பதே எமது இலக்காகும். அதற்காக அந்த மக்களின் பிரதிநிதிகளாக எமது பூரணமான பங்களிப்பு தொடரும் என்று இலங்கைத் தமிழரசு கட்சியின் பெருந்தலைவர் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் திங்கட்கிழமை அதிகாரப்பகிர்வு தொடர்பிலான பேச்சு ஆரம்பமாகவுள்ள நிலையில், ஏற்கனவே ஜனாதிபதியுடனான பேச்சில் ஈடுபட்டு காலஅவகாசத்தை வழங்கியிருந்த நிலையில் தற்போது முன்னெடுக்கப்படும் பேச்சில் எவ்வளவு தூரம் நம்பகத்தன்மையை கொண்டிருக்கின்றீர்கள் என்று வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் அபிலாசைகள் பூர்த்தி செய்யும் வகையில் தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் நீண்டகாலமாகவே உறுதியாக இருக்கின்றோம். அதுவே எமது இலக்காகவும் உள்ளது. அந்த இலக்கை அடைவதற்காக நாம் கிடைத்த அனைத்துச் சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தி வந்துள்ளோம். எதிர்காலத்திலும் அவ்விதமான செயல்பாட்டையே பின்பற்றுவதற்கு உள்ளோம்.

அந்த வகையில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரப் பகிர்வு தொடர்பில் பேச்சுகளை மேற்கொள்வதற்காக எம்மை அழைத்துள்ளார். நாம் அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு அதில் பங்கேற்கவுள்ளோம். அத்துடன் அச்செயல்பாடு முன்னகர்த்தப்படுவதற்கான அனைத்துவிதமான பங்களிப்பையும் நாம் செய்வோம்.

எம்மைப் பொறுத்தவரையில் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்தாது விட்டவர்கள் என்ற பழிச்சொல்லுக்கு ஆழாகத் தயாரில்லை. அதேநேரம், தற்போது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழுவதற்கான வழிகளை தேடும் நிலைமைகளே காணப்படுகின்றது.

ஆகவே, இந்தச் சந்தர்ப்பம் இனப்பிரச்னை தீர்வை காண்பதற்கு உகந்தது அல்லதென்று கூறமுடியாது. பொருளாதார ரீதியாக நாடு முன்னேற வேண்டுமாயின் உள்நாட்டில் அமைதியும் நிரந்தரமான சமாதானமும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதே அடிப்படையான விடயமாகும்.

அந்தவகையில், தற்போதைய சூழலில் இதயசுத்தியுடனான பேச்சு முன்னெடுக்கப்பட்டு தீர்வைஎட்டுவதில் எவ்விதமான பிரச்னையும் கிடையாது. பேச்சுகளின் அடிப்படையில் எட்டப்படுகின்ற அதிகாரப்பகிர்வு உள்ளிட்ட இணக்கப்பாடுகள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்று சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

எமது மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய விடயங்கள் மீண்டும் மீளப்பெறமுடியாத வகையில் நிரந்தரமாக காணப்பட வேண்டும். அதற்கு தென்னிலங்கை தலைவர்கள் பங்களிப்பைச் செய்ய வேண்டும். இதற்காக நாம் எமது பூரணமான ஒத்துழைப்பை வழங்குவதற்கு தயாராகவே உள்ளோம். ஆகவே, அரசாங்கத் தரப்பினரும் இந்த விடயத்தில் நேர்மையாக நாட்டின் எதிர்காலத்தை அடிப்படையாகக் கருதி தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்றார்.

முஸ்லிம் மக்களுக்காக விட்டுக்கொடுப்புக்குத் தயார்.

இதேவேளை, இனப்பிரச்னை தீர்வுதொடர்பில் தொடர்பில் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களின் தலைமைகளுடன் பேச்சுகளை நடத்தப்பட்டு இணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றவிடயம் வலியுறுத்தப்படுவது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டபோது சம்பந்தன் கூறியதாவது. முஸ்லிம் மக்கள் உள்ளக சுயநிர்ணய உரிமைகளுக்கு உரித்துடையவர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் விடயங்களில் நியாயமாக, நீதியாக நடந்து கொள்வதற்கு நாம் எப்போதுமே உறுதியாக உள்ளோம்.

தந்தை செல்வா காலத்திலிருந்தே தமிழ் பேசும் சமூகமாக தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்ற விடயம் இலங்கை தமிழரசுக் கட்சியால் பின்பற்றப்பட்டு வருகின்றது.

அந்த நிலைப்பாட்டிலிருந்து நாம் மாற்றமடையவில்லை. முஸ்லிம் மக்களின் பிரச்னைகளை நாம் அறிந்துள்ளோம். அவர்களின் நியாயமான கோரிக்கைகள் தொடர்பில் நாம் சாதகமான முறையில் சிந்திக்கின்றோம். அத்துடன், அவர்களின் உரிமைகள் சம்பந்தமான விடயத்தில் நாம் ஒருபோதும் அநீதி இழைக்க மாட்டோம். அவர்களுடன் விட்டுக்கொடுப்புக்களை செய்து பேச்சுகளை முன்னெடுப்பதற்கு தயாராகவுள்ளோம் - என்றார். (ஐ)






# திருமலையில் தடையை மீறி பௌத்த நிகழ்வு முன்னெடுப்பு





**கொழும்பு, மே 15**

**இன நல்லிணக்கத்தை பாதிக்கும் என்று திருகோணமலையில் பௌத்த மத நிகழ்வை முன்னெடுக்க தடை விதிக்கப்பட்டிருந்த இடத்துக்குள் நுழைந்து தேரர்களும் - சிங்கள மக்களும் நேற்று நிகழ்வை முன்னெடுத்தனர்.**

திருகோணமலை நெல்சன் திரையரங்குக்கு முன்பாக தொல்லியல் திணைக்களத்தால அடையாளப்படுத்தப்பட்ட இடத்தில் தாய்லாந்தில் இருந்து வருகை தந்திருக்கும் பௌத்த தேரர்களின் உபசம்பதா நிகழ்வுக்காக பிரித் ஓதும் நிகழ்வு ஏற்பாடாகியிருந்தது.

எனினும், இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டால் அது இன நல்லிணக்கத்தை சீர்குலைக்கலாம் என்ற அடிப்படையில் மாவட்ட அரசாங்க அதிபரினால் அந்நிகழ்வுகளை அவ்விடத்தில் நடத்த அனுமதி வழங்குவது தவிர்க்கப்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சில பௌத்த தேரர்கள், சிங்கள மக்கள், திருகோணமலையில் மணிக்கூட்டு கோபுரத்தில் இருந்து சமய நிகழ்வுகளை முன்னெடுத்தனர். அத்துடன், தடை விதிக்கப்பட்ட பகுதிக்குள் முப்படையினரின் பாதுகாப்பையும் மீறி வலுக்கட்டாயமாக நுழைந்து தமது சமய நிகழ்வுகளை நேற்று முன்னெடுத்திருந்தனர்.

தாய்லாந்து உபசம்பதா நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு 270 வருட பூர்த்தியை நினைவுகூரும் நோக்கில் திருகோணமலையிலிருந்து கண்டி நோக்கிய பாத யாத்திரையை முன்னெடுக்கும் முகமாக தாய்லாந்தில் இருந்து வருகைதந்த பௌத்த தேரர்கள், இயந்திரப் படகுகள் மூலமாக திருகோணமலை நகர இறங்கு துறையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வந்திறங்கினர்.

இவர்களை மாவட்ட அரசாங்க அதிபர் உட்பட நதில்லோ பஞ்ஞாலோகோ தேரர் மற்றும் குழுவினர் வரவேற்றனர்.

(ஐ)

# கடல் அலை தாக்கத்தால் படகுகள் சேதமாகின!

மட்டக்களப்பு, மே 15

பூநொச்சிமுனை கடலில் ஏற்பட்ட பெரும் கடல் அலை தாக்கத்தால் சில மீன் பிடி படகுகள் உடைந்து சேதமடைந்தன என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

சுழல் காற்று காரணமாக ஏற்பட்ட பெரும் கடல் அலையால் இரு இயந்திர மீன்பிடி படகுகள் முழுமையாக சேதமடைந்தன. அத்துடன், மற்றோர் படகின் இயந்திரமும் சேதமடைந்தது.

இதே போன்று காத்தான்குடி ஏத்துக் கால் கடற்கரையிலும் மீன்பிடி படகுகள் சேதமடைந்துள்ளன.

இந்த விடயம் தொடர்பாக மீனவர் சங்கங்கள் மீன்பிடி திணைக்கள அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)



# தேசிய தொழில்நுட்ப மாணவர் கிரிக்கெட்! தொழில்நுட்ப கற்கை அணி சம்பியன்!



மட்டக்களப்பு, மே 15

ஆரையம்பதி கோவில்குளம் உயர் தேசிய தொழில்நுட்ப நிறுவகத்தால் மாணவர்களுக்கு இடையில் தலைமைத்துவ பண்பை வளர்க்கும்முகமாக வருடாந்தம் நடைபெறும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி மட்டக்களப்பு தாழங்குடா தேசிய கல்விக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடந்தது.

இதில், உயர் தேசிய தொழில்நுட்ப நிறுவகத்தில் கல்வி பயிலும் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா, ஆங்கில டிப்ளோமா, தகவல் தொழில்நுட்பம் டிப்ளோமா, சுற்றுலா மற்றும் நலனோம்பு முகாமைத்துவம் டிப்ளோமா பாடநெறியின் முதலாம், இரண்டாம் வருடம் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

6 சுற்றுக்களாக இந்தப் போட்டி இடம்பெற்றது. இறுதிப் போட்டியில் முதலாம் வருட உயர் தேசிய டிப்ளோமா தகவல் தொழில்நுட்பம் - உயர் தேசிய டிப்ளோமா ஆங்கில மாணவர்களின் அணிகள் மோதின.

இதில் தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா முதலாம் வருட மாணவர்கள் வெற்றி பெற்று கேடயத்தை தமதாக்கினர்.

பரிசளிப்பு நிகழ்வில் அதிதியாக மட்டக்களப்பு தாழங்குடா தேசிய கல்விக் கல்லூரியின் பீடாதிபதி வெற்றிபெற்ற மாணவர்களுக்கான வெற்றி கேடயங்களை வழங்கி வைத்தார்.

(ஐ)

# தென்கிழக்கு பல்கலை பட்டமளிப்பு மூஸாவுக்கு முதுகலைதத்துவமாணி!

நிந்தவூர், மே 15

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 15ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் ஊடகவியலாளரும் இலக்கிய விமர்சகருமான ஜெஸ்மி எம். மூஸாவுக்கு தமிழ்த்துறைக்கான முதுகலை தத்துவமாணி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் வேந்தர் பாயிஸ் முஸ்தபா முன்னிலையில் நடைபெற்ற முதலாம் நாள் அமர்வின் ஆரம்ப நிகழ்வின் போதே மேற்படி பட்டம் வழங்கப்பட்டது. இந்த பட்டமளிப்பு நிகழ்வில் களனி பல்கலைக்கழக ஆங்கிலத்துறை பேராசிரியர் மைத்திரி விக்ரமசிங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மருதமுனை அல்-மனார் தேசிய பாடசாலையின் பழைய மாணவரும் அந்தப் பாடசாலையின் ஆசிரியருமான ஜெஸ்மி மூஸா தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் விஷேட துறை கலைமாணி மற்றும் விஷேட முதுகலைமாணி ஆகிய பட்டங்களை தமிழ்த்துறையில் பெற்றுக் கொண்டார். பல்கலைக்கழகம் சாராத நிலையில் தமிழ்த்துறைக்கான மூன்று துறைசார் பட்டங்களைப் பெற்ற ஊடகத்துறைசார்ந்த ஈழத்தின் முதல் ஆய்வாளராக இவர் இடம்பிடித்துள்ளார்



சர்வதேச தமிழ் ஆய்வு மாநாடுகளில் பத்துக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ள இவர் இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்து வெளியாகும் பல்கலைக்கழக முதல்தர ஆய்விதழ்களில் பல்கலைக்கழகப் பேராசிரியர்களுடன் இணைந்து ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளார்.

அத்துடன், தேடலின் ஒரு பக்கம், முகநூல் முகவரிகள், நாகம்மாள் ஒரு பார்வை, திருக்குறள் பாடத்திட்டத் தெளிவுரை, தமிழ் மொழி இலக்கியப் பேழை, தனியாள் கல்வித்துறை கௌரவிப்புக்கள் அடங்கலாக எட்டு நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

தமிழ் கற்பித்தல் துறையில் இலங்கையின் பல பாகங்களிலும் பணியாற்றி வரும் இவர் தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் கலாநிதி ஆய்வு மாணவனாகவும் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-06)

# காரைதீவில் நாளை நடமாடும் சேவை!

காரைதீவு, மே 15

காரைதீவு பிரதேச செயலகம் நடத்தும் நடமாடும் சேவை நாளை செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணி தொடக்கம் பிற்பகல் 04.00 மணி வரை நடைபெறும் என்று பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் தெரிவித்தார்.

காரைதீவு பிரதேச செயலக வளாகத்தில் நடைபெறவிருக்கும் இந்த நடமாடும் சேவையில் ஆள்பதிவு திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, காணிகள் பிரிவு, இலங்கை மின்சார சபை, கல்வி திணைக்களம், பிரதேச சபை உள்ளிட்ட 15 நிறுவனங்கள் சேவையை வழங்கவுள்ளன.

(ஐ)

# குழந்தை பிரசவித்த தாய் குருதி பெருக்கால் மரணம்

திருகோணமலை, மே 15

திருகோணமலை- பாட்டாளிபுர கிராமத்தைச் சேர்ந்த 24 வயது இளம் கர்ப்பவதி தாயொருவர் மருத்துவமனையில் பிரசவத்துக்காக சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்தார்.

விசேட பெண் மருத்துவ நிபுணர் குறித்த நாளில் வருகைதராமையால் மிகவும் ஆபத்தான முறையில் குழந்தையை பிரசவித்ததன் பின்னர் அதீத குருதிப் போக்கு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து குழந்தையும் தாயும் திருகோணமலை பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் தாய் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக தெரிய வருகின்றது. (ஐ)

# பலஸ்தீனம் - இஸ்ரேல் போர் நிறுத்தம் அறிவிப்பு

ஜெருசலேம், மே 15

**ஐந்து நாள் போரின் பின்னர், பலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் இடையே போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.**



இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவி வருகிறது. பலஸ்தீனம் காஸா முனை மற்றும் மேற்குகரை என இரு பகுதிகளாக உள்ளது. காஸா முனையை ஹமாஸ் அமைப்பு நிர்வகித்து வருகிறது. இந்த அமைப்பை பயங்கரவாத அமைப்பாக இஸ்ரேல் கருதுகிறது. இதேவேளை மேற்குகரையை பலஸ்தீன ஜனாதிபதி முகமது அப்பாஸ் நிர்வகித்து வருகிறார்.

இதேசமயம், ஹமாஸ் போன்று இஸ்லாமிக் ஜிகாத் உள்பட மேலும் பல ஆயுத குழுக்களும் மேற்குகரை மற்றும் காஸாவில் செயல்படுகின்றன. இந்த ஆயுத குழுக்களும் இஸ்ரேலும் அடிக்கடி மோதலில் ஈடுபடுகின்றன.

இதனிடையே, பலஸ்தீன ஆயுதக்குழுவான இஸ்லாமிக் ஜிகாத் அமைப்பின் தலைவர் காதர் அதானென் (வயது 45) கடந்த 2ஆம் திகதி இஸ்ரேல் சிறையில் உயிரிழந்தார். எந்த வித குற்றச்சாட்டுகளும் இல்லாமல் தன்னை இஸ்ரேல் படையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர் என்று கூறிகடந்த 86 நாட்களாக உண்ணாவிரதம் இருந்த காதர் இஸ்ரேல் சிறையில் உயிரிழந்தார்.

இதையடுத்து, காஸா முனையில் இருந்து இஸ்ரேல்மீது இஸ்லாமிக் ஜிகாத் ஆயுதக்குழு எறிகணை தாக்குதல்களை நடத்தியது. இதனை தொடர்ந்து, காஸாவில் செயல்பட்டு வரும் இஸ்லாமிக் ஜிகாத் ஆயுதக்குழுவை குறிவைத்து கடந்த செவ்வாய்கிழமை முதல் இஸ்ரேல் வான்வெளி தாக்குதல் நடத்தியது. இதில், 30 பேர் உயிரிழந்தனர். மேலும், 90 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த சூழலில் கடந்த சில நாட்களாக இஸ்ரேல் நடத்திய வான்வெளி தாக்குதலில் காஸா முனையில் செயல்பட்டு வரும் இஸ்லாமிக் ஜிகாத் ஆயுதக்குழுவின் மூத்த தளபதிகள் 5 பேர் கொல்லப்பட்டனர். மேலும் இஸ்லாமிக் ஜிகாத் ஆயுதக்குழுவின் எறிகணை தாக்குதல் பிரிவு தளபதியும் கொல்லப்பட்டனர் என்று தகவல் வெளியாகி இருந்தது.

இந்நிலையில், கடந்த 5 நாட்களாக நடந்து வந்த மோதலுக்குப் பிறகு பலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் இடையே போர் நிறுத்தம் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கர்நாடகா தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி!

## பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கிறது



பெங்களூர், மே 15

இந்தியாவின் கர்நாடக சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸ் கட்சி தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது. இதையடுத்து, அந்த கட்சியினர் கொண்டாட்டத் தில் ஈடுபட்டு வருகின்றனர்.

224 தொகுதிகளை கொண்ட கர்நாடக சட்டப்பேரவை தேர்தல் முடிவுகளின்படி காங்கிரஸ் கட்சி - 136, பா. ஜ. க. - 65, மதசார்பற்ற ஜனதா தளம் - 19, மற்றவை- 4 ஆசனங்களை கைப்பற்றியுள்ளன.

கர்நாடகாவை ஆளும் பா. ஜ. கட்சி தோல்வியடைந்துள்ளது. 5 ஆண்டுகளின் பின்னர் காங்கிரஸ் கட்சி பெரும் பான்மையை கைப்பற்றி ஆட்சி அமைக்கவுள்ளது.

தொடர்ச்சியாக தோல்விகளை சந்தித்து வரும் காங்கிரஸ் கட்சிக்கு கர்நாடக தேர்தல் வெற்றி பெரும் உற்சா கத்தை கொடுத்துள்ளது. 2024 பாராளுமன்றத் தேர்த லுக்கு இந்த வெற்றி பெரிதும் உதவும் என்றும் அந்தக் கட்சி கருதுகின்றது. (ஐ)

## ஒரு இலட்சம் பேருக்கு தண்டனை!

பீஜிங், மே 15

சீனாவில் ஒரு இலட்சத்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அதிகாரிகளுக்கு ஊழல் வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

சீனாவை ஜின்பிங் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகின்றது. ஊழலுக்கு எதிரான பிரசாரத்தை தொடங்கிய ஜனாதிபதி ஜின்பிங் தொடங்கியிருந்தார்.

இதன் அடிப்படையில் கிடைத்த பொதுமக்களின் முறைப்பாடுகளின் அடிப்படையில், ஒரு இலட்சத்து 10 ஆயிரம் அதிகாரிகள் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டனர். மாநில அதிகாரிகள், இராணுவ குழு உறுப்பினர்கள், அமைச்சர்கள், அமைச்சு அதிகாரிகள் எனப் பலர் இவ்வாறு குற்றவாளிகளாக பட்டியல்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. முதல் காலாண்டு ஊழல் எதிர்ப்பு அறிக்கையில் 7 இலட்சத்து 76 ஆயிரம் மனுக்கள் பெறப்பட்டன. இவை 2 இலட்சத்து 31 ஆயிரம் முறைப்பாடுகள் தொடர்பானவை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



ருவாண்டாவில் 1994 இல் நடந்த இனப் படுகொலையின்போது முபிரிசி கிராமத்தில் 1110 உடலங்கள் புதைக்கப்பட்ட புதைகுழி ஒன்று கடந்தவாரம் கண்டறியப்பட்டது...!

# வளிமண்டல பகுதியில் மர்ம சமிக்ஞை ஒலிகள்!

## விஞ்ஞானிகள் ஆராய்வு

நியூயோர்க், மே 15

பூமியின் வளி மண்டலத்தில் உருவான மர்ம சத்தங்களை விஞ்ஞானிகள் பதிவு செய்துள்ளனர். பூமியின் அடுக்கு மண்டலத்தின் ஒலிகளை பதிவு செய்ய இராட்சத பலூன்கள் 70 ஆயிரம் அடி உயரத்துக்கு அனுப்பப்பட்டன.

ஸ்ட்ரா டோஸ்பியர் என்பது பூமியின் வளி மண்டலத்தின் 2ஆவது அடுக்கு ஆகும். அதன் கீழ் மட்டத்தில் ஓசோன் படலம் உள்ளது. இந்த அடுக்கு மண்டலத்தில் ஒலிகளை பதிவு செய்ய பலூனில் மைக்ரோபோன்கள் உள்ளிட்ட நவீன கருவிகள் பொருத்தப்பட்டன. இந்த பலூன்கள் முதலில் எரிமலைகளை கண்காணிக்க வடிவமைக்கப் பட்டிருந்தன.

பூமியின் அடுக்கு மண்டலத்துக்கு சென்ற இராட்சத பலூன்கள் அங்கு உருவாகும்ஒலிகளை பதிவு செய்தது. அந்த ஒலிகளை விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர். அதில் மர்மமான சத்தங்கள் பதிவானமை தெரிய வந்தது. இந்த மர்ம ஒலிகள் குறித்து அமெரிக்காவின் சிக்காகோவில் நடந்த ஒலியியல் சங்கத்தின் 184ஆவது கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

இது தொடர்பாக ஆராய்ச்சியாளர் டேனியல் போமன் கூறும் போது, "பூமியின் வளி மண்டலத்தில் அடையாளம் காண முடியாத சில விசித்திரமான ஒலிகளும் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றன. சில முறை மர்மமான சமிக்ஞைகள்ஏற்பட்டன. ஆனால் இவற்றின் ஆதாரம் முற்றிலும் தெரியவில்லை"என்றார்.

## யூ-ரியூப்பருக்கு சிறைத்தண்டனை?

நியூயோர்க், மே 15

தனது யூ-ரியூப் சனலின் பார்வையாளர்களை அதிகரிக்க விமானத்தை வேண்டுமென்றே வெடிக்கச் செய்வருக்கு 20 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படவுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து தனியார் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள தகவல்களில், டிரெவர் ஜேக்கப் என்ற நபர் வேண்டுமென்றே விபத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டதால் விசாரணைக்கு உட்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார். இவர் செய்த குற்றத்துக்கு அதிகபட்சம் 20 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்க முடியும்.

இவர் படமாக்கிய விமானம் விபத்தில் சிக்கும் காணொலியை இதுவரை சுமார் 30 இலட்சத்துக்கும் அதிகமானோர் பார்த்துள்ளனர். 29 வயதான டிரெவர் செயலுக்காக விமானத்தை செலுத்த அவருக்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

2021 டிசெம்பர் கலிபோர்னியாவில் உள்ள லாஸ் பட்ரெஸ் காட்டுப்பகுதியில் இவர் சிறிய இயந்தரம் கொண்ட விமானத்தை வேண்டுமென்றே வெடிக்க செய்துள்ளார். விமானம் வெடித்து சிதறும் காட்சியும் அதிலிருந்து அவர் பரசூட் மூலம் குதித்து தப்பிக்கும் காட்சியும் அவரின் யூ-ரியூப் தளத்தில் பதிவானது.

எனினும், டிரெவர் தனது பக்க நிலைப்பாட்டை நீதிமன்றுக்கு தெரிவிக்க அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்தே அவருக்கான தீர்ப்பு வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# குழப்பங்களுக்கு மத்தியில் லக்னோ அணி வெற்றி!

ஹைதராபாத், மே 15

ஹைதராபாத் ரஜீவ் காந்தி விளையாட்டரங்கில் சனிக்கிழமை நடைபெற்ற ஐ. பி. எல். போட்டியின் போது இரசிகர்களின் கட்டுமீறிய செயல்களுக்கு மத்தியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத்தை 7 விக்கெட்களால் லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் வெற்றிகொண்டது.

இந்த வெற்றியுடன் லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் தனது ப்ளே ஓவ் வாய்ப்பை சற்று அதிகரித்துள்ளதுடன் சன்ரைசர்ஸ் ஹைதராபாத்தின் பிளே ஓவ் சுற்று வாய்ப்பு கேள்விக் குறியாகியுள்ளது.

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியால் நிர்ணயிக்கப்பட்ட 183 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் 19.2 ஓவர்களில் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து 185 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

லக்னோ 8.2 ஓவர்களில் 54 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்து சிறு தடுமாற்றத்தை எதிர்கொண்டது. ஆனால், ப்ரேராக் மன்காட் 2 முக்கிய இணைப்பாட்டங்களில் பங்காற்றி லக்னோவின் வெற்றியை இலகுவாக்கினார்.

மார்க்ஸ் ஸ்ரொய்னிஸுடன் 3ஆவது விக்கெட்டில் 73 ஓட்டங்களைப் பகிர்ந்த மன்காட், தொடர்ந்து நிக்கலஸ் பூரணுடன் பிரிக்கப்படாத 4ஆவது விக்கெட்டில் 58 ஓட்டங்களைப் பகிர்ந்து 4 பந்துகள் மீதமிருக்க அணியின் வெற்றியை உறுதிசெய்தார்.

மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 25 பந்துகளில் 40 ஓட்டங்களைப் பெற்று ஓட்ட வேகத்தை சற்று அதிகரிக்கச் செய்தார். மான்காட் 45 பந்துகளில் 64 ஓட்டங்களுடனும் நிக்கலஸ் பூரண் 13 பந்துகளில் 44 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் ஹைதராபாத் 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது.

சுமாரான வேகத்தில் ஓட்டங்களைப் பெற்ற சன்ரைசர்ஸ் ஹைதராபாத் 13ஆவது ஓவரில் 5 விக்கெட்களை இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

தென்னாபிரிக்க வீரர் ஹென்ரிச் கிளாசென் 47 ஓட்டங்களைப் பெற்றதுடன் 6ஆவது விக்கெட்டில் அப்துல் சாமத்துடன் 58 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை ஓரளவு நல்ல நிலையில் இட்டார். அப்துல் சாமத் ஆட்டம் இழக்காமல் 37 ஓட்டங்களைப் பெற்றார்.

இவர்களைவிட ஆரம்ப வீரர் அன்மொன்ப்ரீத் சிங் 36 ஓட்டங்களையும் அணித் தலைவர் ஏய்டன் மார்க்ராம் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அணித் தலைவர் க்ருணல் பாண்டியா 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

அப்துல் சாமத் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தபோது 19ஆவது ஓவரின் 3ஆவது பந்தை ஆவேஷ் கான் இடுப்பளவு உயரத்திற்கு வீசினார். இதனை கள மத்தியஸ்தர் முறையற்ற பந்தாக அறிவித்தார்.

மத்தியஸ்தரின் அந்தத் தீர்ப்பை மீயாய்வு செய்யுமாறு லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் கோரியது. இதனை அடுத்து அதனை மீளாய்வு செய்த தொலைக்காட்சி மத்தியஸ்தர் அந்த பந்து விதிகளுக்கு உட்பட்டது என்று அறிவித்தது.

மத்தியஸ்தரின் தீர்ப்பு மாற்றப்பட்டதால் ப்ரீ ஹிட் இல்லாமல் போனது. இதனால் ஆத்திரமடைந்த இரசிகர்கள் சிலர் குழப்பமடைந்தனர்.

இதனால் ஆட்டம் நிறுத்தப்பட்டு சிறிது நேரத்தின் பின்னர் தொடர்ந்தது. சற்று நேரத்தில் கிளாசன் 47 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார்.

முறையற்ற பந்து முடிவு மாற்றப்பட்டதை டொம் மூடி உள்ளிட்ட நிபுணர்கள் கடுமையாக விமர்சித்தனர். தொலைக்காட்சி மத்தியஸ்தர் தவறான முடிவை எடுக்க ஏன் இவ்வளவு நேரம் எடுக்க வேண்டும்?' என்று அவர்கள் ட்வீட் செய்துள்ளார்.

'நேர்மையாகக் கூறுவதென்றால், இரசிகர்களின் செயலால் ஏமாற்றம் அடைந்தேன். அது விரும்பத்தக்கதல்ல' என்று போட்டி முடிவில் கிளாசென் கூறினார்.



'போட்டியில் இருந்த உத்வேகத்தை அது குறைத்தது. அத்துடன் மத்தியஸ்தமும் சிறப்பாக அமையவில்லை. ஆனால் விடயங்களை சொந்த கைகளில் எடுக்க முடியாது' எனவும் அவர் குறிப்பிட்டார்.

இறுதியில் ஐ. பி. எல். ஒழுக்க விதிகளை மீறினார் என்ற காரணத்திற்காக கிளாசனின் போட்டி கட்டணத்தில் 10 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டது. (ஐ)

# ப்ரப்சிம்ரன் கன்னி சதம்; பஞ்சாப் கிங்ஸ் வெற்றி!

டில்லி, மே 15

டில்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு எதிராக டில்லி பெரோஸ் கொட்லா விளையாட்டரங்கில் சனிக்கிழமை நடைபெற்ற ஐ. பி. எல். போட்டியில் ப்ரப்சிம்ரன் சிங் குவித்த கன்னிச் சதமும் ஹார்ப்ரீட் ப்ரார் கைப்பற்றிய 4 விக்கெட்களும் பஞ்சாப் கிங்ஸுக்கு 31 ஓட்ட வெற்றியை ஈட்டிக்கொடுத்தது.

இந்தப் போட்டியில் தோல்வி அடைந்த டில்லி அணி முதலாவது அணியாக ப்ளே ஓவ் வாய்ப்பை இழந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் கிங்ஸ், ஆரம்ப வீரர் ப்ரப்சிம்ரன் சிங் குவித்த அபார சதத்தின் உதவியுடன் 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது.

ப்ரப்சிம்ரன் சிங் 65 பந்துகளில் 10 பௌண்ட்றிகள், 6 சிக்ஸர்களுடன் 103 ஓட்டங்களைக் குவித்து 19ஆவது ஓவரில் ஆட்டம் இழந்தார்.

அவருக்கு அடுத்ததாக சாம் கரன் பெற்ற 20 ஓட்டங்களே அணியில் இரண்டாவது அதிகபட்ச எண்ணிக்கையாக இருந்தது. ப்ரப்சிம்ரனும் சாம் கரனும் 4ஆவது விக்கெட்டில் 72 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

சிக்கந்தர் ராஸா 11 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் இஷாந்த் ஷர்மா 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பஞ்சாப் கிங்ஸால் நிர்ணயிக்கப்பட்ட சுமாரான 168 ஓட்டங்கள் வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டில்லிகப்பிட்டல்ஸ் 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

அணித் தலைவர் டேவிட் வோர்ணரின் அதிரடி அரைச் சதத்தின் உதவியுடன் டில்லி கப்பிட்டல்ஸ் பவர் ப்ளே நிறைவில் விக்கெட் இழப்பின்றி 65 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

இதன் காரணமாக டில்லி கப்பிட்டல்ஸ் இலகுவான வெற்றியை ஈட்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

டேவிட் வோர்ணர், பில் சோல்ட் ஆகிய இருவரும் 38 பந்துகளில் 69 ஓட்டங்களைப் பகிர்ந்து பலமான ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.




ஆனால், 23 பந்துகள் இடைவெளியில் 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 6 விக்கெட்களை இழந்ததன் காரணமாக டில்லி கப்பிட்டல்ஸ் தோல்வியைத் தழுவ நேரிட்டது.

டேவிட் வோர்ணர் 27 பந்துகளில் 54 ஓட்டங்களையும் பில் சோல்ட் 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

மத்திய வரிசையில் அமான் ஹக்கிம் கான் (16), ப்ரவீன் டுபே (16), குல்தீப் யாதவ் (10 ஆ.இ.) ஆகிய மூவரே இரட்டை இலக்க எண்ணிக்கைகளைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஹார்ப்ரீட் ப்ரார் 26 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் ராகுல் சஹார் 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் நதன் எலிஸ் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

# பொது தீர்மானம் எடுக்கும்போது அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவு!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் அறிவிப்பு

கொழும்பு, மே 15

**நாட்டுக்கான சரியான பொதுத் தீர்மானங்களை எடுக்கும் போது நிபந்தனையற்ற விதத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

கொழும்பு - பத்தரமுல்லையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவின் இளம் உறுப்பினர்களை தெளிவுபடுத்துவதற்கான வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார்.



எதிர்கட்சியாக அரச தரப்பிலுள்ள குறைபாடுகளை சுட்டிக் காட்டினாலும் முற்போக்கு அரசியல் கட்டமைப்பில் சாதகமான நல்லவை நடக்கும்போது, அதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

நல்லதை நல்லது எனக் கூறி பாராட்ட இயலுமை இருக்க வேண்டும். வங்குரோத்து நிலையில் உள்ள இலங்கையை அதிலிருந்து மீட்கும் பணியில் நாட்டுக்கு ஏதாவது நல்லது நடந்தால் அது பாராட்டத்தக்கது என்றும் அவர் இதன்போது கூறினார். (ஐ)

# ஒரே வீட்டிலிருந்த 4 சிறார் காணாமல் போயுள்ளனர்!

கொழும்பு, மே 15

ஒரே வீட்டில் தங்கியிருந்த பல குடும்பங்களை சேர்ந்த இரு குழந்தைகள், இரு சிறுவர்களுமாக நால்வர் காணாமல் போயுள்ளனர் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலி - நெலுவை பிரதேசத்தில் மூன்று மாதங்கள், ஒரு வயது குழந்தைகள் இருவரும் 10, 13 வயது சிறுவர்களுமே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இவர்களின் பெற்றோர்கள் நெலுவ பிரதேசத்தில் தோட்டங்களில் தற்காலிகமாக தொழில் செய்வதற்காக மியானதுர பிரதேசத்தில் வாடகை வீட்டில் தங்கி தங்கியிருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு முதல் பிள்ளைகள் காணாமல் போயினர் என்றுபெற்றோர் 119 இற்கு அறிவித்துள்ளது.

காணாமல் போன சிறுவர்கள் தொடர்பில் நேற்று மாலை வரை எந்தத் தகவலும் வெளியாகவில்லை. (ஐ)

# நச்சு தன்மையான தேங்காய் எண்ணெய் சந்தையில் விற்பனை!

கொழும்பு, மே 15

நச்சுத் தன்மைக் கொண்ட இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது என்று அகில இலங்கை பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

குருநாகலில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அந்த சங்கத்தின் இணைப்பாளர் புத்திக டி சில்வா இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அண்மையில், கண்டு பிடிக்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட நச்சுத் தன்மை கொண்ட தேங்காய் எண்ணெய் துறைமுகத்தில் இருந்து விடுவிக்கப்பட்டமை பிரச்னைக்குரியதாகும்.

நச்சுத்தன்மை கொண்ட இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் அடங்கிய கொள்கலன் ஒன்று கெக்கிராவையில் வைத்து பொது சுகாதார பரிசோதகர்களால் மீட்கப்பட்டது.

இலங்கைக்கு தேங்காய் எண்ணெய்யை இறக்குமதி செய்து வெவ்வேறு இரசாயன திரவங்களை பயன்படுத்தி அவற்றை தூய்மைப்படுத்தி சந்தைக்கு விடுவிக்கின்றமை தொடர்பில் முன்னதாகவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த தேங்காய் எண்ணெய் தொகுதி துறைமுகத்தில் இருந்து எவ்வாறு வெளியேற்றப்பட்டது என்பது தொடர்பில் கேள்வி எழுவதாகவும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# கொரோனாவுக்கு இருவர் உயிரிழப்பு

கொழும்பு, மே 15

கொரோனா தொற்று காரணமாக மேலும் இருவர் உயிரிழந்தனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட கோவிட் மரணங்கள் தொடர்பான அறிக்கைக்கு அமைவாக இந்த மரணங்கள் உறுதி செய்யப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த மரணங்கள் பதிவாகின என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பாடசாலைகளில் டெங்கு நுளம்பு பெருகாமல் தடுக்க வேண்டும்!

## கல்வி அமைச்சிடம் கோரிக்கை

கொழும்பு, மே 15

பாடசாலைகளில் டெங்கு நுளம்புகள் பெருகும் பிரச்னைக்கு கல்வி அமைச்சு பொறுப்பேற்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் சந்திமால் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் உள்ள பல பாடசாலைகளில் உரிய பணியாளர்கள் இன்மையால் பாடசாலை தொடர்பான துப்புரவு மற்றும் துப்புரவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, அந்த பாடசாலைகளுக்கு அருகில் கழிவுகள் குவிந்து டெங்கு நுளம்புகள் பரவுவது அதிகரித்துள்ளதாகவும், இது தொடர்பில் கல்வி அமைச்சு கவனம் செலுத்த வேண்டுமென தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், பாடசாலை தொடர்பான டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கு தேவையான செயற்பாடுகளை பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்த வேண்டுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# மாணவர்கள் சென்ற வான் விபத்து ஆசிரியை உட்பட 11 பேர் படுகாயம்!

பதுளை, மே 15

நடன நிகழ்வு ஒன்றில் பங்கேற்பதற்காக ஆசிரியர்கள், மாணவர்கள் ஏற்றிச் சென்ற வான் மரத்துடன் மோதுண்டு ஏற்பட்ட விபத்தில் 11 பேர் படுகாயமடைந்துள்ளனர் - இதில் சிலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பதுளை - பண்டாரவளை பிரதான வீதியில் ஹாலி - எல பிரதேசத்தில் நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பதுளை பிரதேசத்தில் உள்ள கலை நிறுவனம் ஒன்றின் நடன ஆசிரியை மற்றும் மாணவர்கள் குழுவே இந்த விபத்தில் சிக்கியது. இதில் ஆசிரியையும், 8 மாணவிகளும், 2 மாணவன்களும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் பதுளை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவர் பாலித ராஜபக்க்ஷ தெரிவித்துள்ளார். (ஐ)

# காதலர்களை தாக்கிய யானை; வழிகாட்டிகளுக்கு மறியல்!

கொழும்பு, மே 15

இரண்டு இளம் காதலர்களுக்கு அனுமதியின்றி இரவைக் கழிக்க இடம் வழங்கிய சுற்றுலா வழிகாட்டிகள் இருவரை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க பண்டாரவளை நீதிவான் திருமதி கே. ஜீவராணி உத்தரவிட்டுள்ளார்.

அப்புத்தளை மற்றும் பூனாகலை பிரதேசங்களைச் சேர்ந்த 24 மற்றும் 33 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பற்ற குறித்த பகுதியில் காதலர்கள் கூடாரமிட்டுத் தங்கியபோது காட்டு யானையின் தாக்குதலுக்கு இருவரும் இலக்காகினர். இதில், 23 வயதுடைய காதலி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். சம்பவத்தில் உயிரிழந்த பெண், தனியார் மருத்துவமனை ஒன்றில் தாதியாக பயிற்சி பெற்று வந்த மாத்தறை கேகனதுர பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

அந்தப் பெண்ணின் காதலன் (22) காயமடைந்து தற்போது தியத்தலாவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இவர்களுக்கு வழிகாட்டியாக இருந்த இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# மலைநாட்டில் கன மழை; சில பகுதிகளில் வெள்ளம்!

கண்டி, மே 15

மத்திய மலைநாட்டில் கடந்த இரண்டு நாட்களாக கனத்த மழை பெய்து வருகிறது.

நேற்றுமுன்தினம் இரவு பெய்த கன மழையால் ஆறுகளில் நீர்ப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் சாமிமலை பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

மேலும் கெசல்கமு ஆற்றில் வெள்ள பெருக்கு ஏற்பட்டதால் காசல்ரீ நீர் தேக்கத்தின் தண்ணீர் மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளது.

அதேபோல் மவுசாகலை நீர் தேக்கத்தின்தண்ணீர் மட்டம் உயரும் நிலையில் உள்ளது. மழை தொடரும் பட்சத்தில் நீர் தேக்கங்களின் நீர் மட்டம் மேலும் உயரும். (ஐ)

## களுத்துறை சிறுமி மரணம்:

# அறிக்கை கோருகின்றது சிறுவர் பாதுகாப்பு சபை

கொழும்பு, மே 15

களுத்துறை பகுதியில் 16 வயதான பாடசாலை மாணவி உயிரிழந்தமை மற்றும் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் ஆராய்வதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அதன் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதயகுமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

களுத்துறை பகுதியில் 16 வயதான சிறுமி உயிரிழந்தமை, மற்றுமொரு பகுதியில் பாடசாலை மாணவர்கள் ஆசியரியரால் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டமை உள்ளிட்ட சம்பவங்கள் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அறிக்கையை கோரியுள்ளது.

இதற்கமைய குற்றச் செயலின் தன்மை, அது தொடர்பில் நீதிமன்றுக்கு முன்வைக்கப்பட்டுள்ள சமர்ப்பணங்கள், தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரங்கள், அதில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் மற்றும் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் அதற்கான காரணம் என்பன தொடர்பில் ஆராயப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், பொலிஸார் முன்னெடுக்கும் விசாரணைகளின்போது ஏதேனும் முறைகேடுகள் ஏற்படுமாயின் அது தொடர்பில் நீதிமன்றில் தங்கள் தரப்பு சமர்ப்பணங்களை முன்வைக்க முடியும் என்றும் சிறுவர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஐ)

## பிரதமர்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடம் பிரதமர் பதவியை தனக்கு வழங்குமாறு பஸில் ராஜபக்ஷ நேரில் கேட்டிருந்தார். இதனால் பஸிலுக்கும் யோசிதவுக்கும் இடையில் கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது. நாட்டை விட்டு பஸில் ராஜபக்ஷ திடீரென வெளியேறுவ தற்கு இதுவும் ஒரு காரணம் என்று கூறப்படுகின்றது.

துபாய்க்கு செல்வதை மிகவும் இரகசியமாக வைக்க ஏற்பாடு செய்திருந்ததால், குறைந்தபட்சம் அந்த பயணம் குறித்து மகிந்தவுக்கு தெரிவிக்காமல் இருக்க பஸில் ஏற்பாடு செய்திருந்தார்.

எவ்வாறாயினும், பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்களும் மூன்றாம் தரப்பினரும் தற்போது பஸிலையும் யோசிதவையும் சமரசப்படுத்தியுள்ளனர். இதன்படி, கடந்த சில நாட்களாக துபாயில் இருக்கும் பஸிலும் யோசிதவும் தொலைபேசி மூலம் இணக்கமாக பேசியுள்ளனர் என்றும் அறிய வருகின்றது. (ஐ-சி)

## ‘குமுதினி’...

இதனைத் தொடர்ந்து காலை 9.00 மணி முதல் குமுதினி படுகொலை நினைவேந்தல் குழுமத்தின் நெடுந்தீவு பிரதேச தலைவர் வி.ருத்திரன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நினைவுத்தூபிக்கான நினைவுச் சுடர் ஏற்றல் மற்றும் மலர் அஞ்சலி செலுத்துதல் ஆகிய நிகழ்வுகளுடன் பசுந்தீவு ருத்திரனின் ‘குருதியின் குமுறல்கள்’ என்ற கவிதை நூலும் வெளியிட்டு வைக்கப் படவுள்ளது.

நிகழ்வின் இறுதியில் நினைவாலய வளாகத்தில் மரநடுகையும் நடைபெறவுள்ளது.

1985ஆம் ஆண்டு இதேநாளில் குறிகாட்டுவான் - நெடுந்தீவு இடையே சேவையில் ஈடுபடும் குமுதினி படகில் பயணித்த குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் உட்பட 33 பேர் கடற்படையினரால் வெட்டியும் குத்தியும் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கை..

திருகோணமலையில் அமைக்கப்பட்டுள்ள எண்ணெய்க் குதங்களுக்கு எரிபொருளை வழங்குவதற்காக இந்தியாவில் இருந்து திருகோணமலைக்கு நிலத்தடி வழியாக எரிபொருள் குழாய் அமைக்கவும் இரு நாட்டு அரசுகளும் திட்டமிட்டுள்ளன.

மின்சார கேபிள் அமைக்க சுமார் 80 கோடி அமெரிக்க டொலர்கள் செலவாகும் என தற்போதைய முதற்கட்ட கணிப்பில் தெரியவந்துள்ளது. (ஐ)

## கொழும்பில்..

தனர். நேற்று முன்தினம் இரவு குவிக்கப்பட்ட படையினரை அங்கிருந்து விலக்கும் தீர்மானத்தை அரசு எடுக்க வில்லை என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அவசரகால சூழ்நிலையில் எவ்வாறு செயல்படுவது என்பது குறித்த முன் பயிற்சிக்காக கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் கடுமையான பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பொலிஸாருக்கு மேலதிகமாக இராணுவத்தினரும் கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளுக்கு பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக நேற்று முதல் வரவழைக்கப்பட்டனர்.

பொலிஸ் கலகத் தடுப்புப் பிரிவினரும், தீயணைப்புப் பிரிவினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தை கவிழ்க்க சில சதித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்று புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலை அடுத்தே கொழும்பு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அம்பாந்தோட்டை...

எனவும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மிகவும் நட்பு ரீதியான உறவு உள்ளது. இதற்கமைய இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் விமான சேவைகள் இடம்பெறுவதுடன் தற்போது கப்பல் போக்குவரத்தும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அத்துடன், இலங்கை தமது எரிசக்தி துறையை கட்டியெழுப்புவதற்கு இந்தியா உதவுகிறது - என்றும் அமைச்சர் சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## படைகளின்...

இதைத் தொடர்ந்து நேற் றைய தினம் வாகனம் ஒன்றில் பௌத்த பிக்கு ஒருவர் அழைத்து வரப்பட்டார். இராணுவத் தினரால் அமைக்கப்பட்ட மேடையில் அமர்ந்து அவர் வழிபாட்டு நிகழ்வை முன்னெடுத்தார் என்று அறிய வருகின்றது.

கடந்தகாலங்களில் சிங்கள மாணவர்களின் பங்களிப்புடன் மட்டுமே வெசாக் நிகழ்வுகள் நடை பெற்றிருக்கின்றன.

இந்த ஆண்டு பௌத்த பிக்குவை அழைத்து வந்து நிகழ்வை நடத்தியிருப்பது தொடர்பில் பல்கலைக் கழகத்தின் ஏனைய மாணவர்கள் வட்டத்தில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

மருத்துவ பீடத்தின் பீடாதிபதி சுரேந் திரகுமார் மற்றும் ரகுராம், பாலகோபி ஆகிய மூவரே மருத்துவபீட விரிவுரையாளர்கள் தரப்பில் பங்கேற்றிருக்கின்றனர்.

மருத்துவபீடத்தில் நடைபெறும் நிகழ்வுகளுக்காக அனைத்து ஆண்டு மாணவர்களிடமிருந்தே பணம் சேகரிக்கப்பட்டதாகவும் இந்த ஆண்டு நிகழ்வு நடத்திய அணி மாணவர்களிடத்திலிருந்து மட்டுமே நிதி சேகரிக்கப்பட்டதாகவும் அதுவும் குறைந்த அளவிலான பணமே பெறப்பட்டுள்ளது. இதனால் இந்த நிகழ்வுக்கான ஏற்பாட்டுக்காக நிதிப்பங்களிப்போ அல்லது ஏனைய உதவிகளோ அதிகாரத் தரப்பு ஒன்றால் வழங்கப்பட்டிருக்கலாம் என்றும் மாணவர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ஐ)

## தேர்தலை...

ளின் கருத்துப்படி பொதுமக்களால் தெரிவு செய்யப்படாத ஜனாதிபதிக்கு அந்த சட்டப்பூர்வ ஆணை இல்லை என்ற வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் பதவிக்காலத்தின் மிகுதிக் காலத்தை நிறைவு செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலை முற்கூட்டியே அறிவிக்கும் வகையில் அரசமைப்பை மாற்றுவதே புதிய திருத்தத்தின் நோக்கமாகும்.

இது தொடர்பாக அரச சட்ட வல்லுநர்கள் பூர்வாங்க விவாதத்தை ஏற்கனவே தொடங்கி விட்டனர் என்றும் அறிய வருகின்றது. (ஐ)

## விலக மறுக்...

மாகாணங்களின் ஆளுநர்கள் பதவி விலக மறுத்து வருகின்றனர். அத்துடன், அவர்கள் பல அரசியல் தரப்பினரையும் சந்தித்து பதவிகளை தக்கவைக்க முயற்சிகளையும் முன்னெடுத்து வருகின்றனர். இந்நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது செயலாளருக்கு புதிய உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதன்படி, பதவி விலக மறுக்கும் ஆளுநர்கள், அவர்களின் ஆளணியினரின் சகல கொடுப்பனவுகளையும் நிறுத்தி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். அத்துடன், இந்த ஆளுநர்கள் விடுக்கும் உத்தரவுகள் எவற்றையும் செயல்படுத்த வேண்டாம் என்று அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு பணிக்குமாறும் கட்டளை பிறப்பித்துள்ளார் என்றும் அறிய வருகின்றது. (ஐ)

# முஸ்லிம்களின் பிரச்னைகள் குறித்து ஜனாதிபதி அழைத்தால் பேசுவோம்!

## ரவூப் ஹக்கீம் எம். பி.

கொழும்பு, மே 15

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முஸ்லிம் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் பேச்சுகளை மேற்கொள்வதற்காக இதய சுத்தியுடன் அழைப்பு விடுத்தால் நாம் அதில் பங்கேற்பதற்கு தயாராகவுள்ளோம் என்று சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இனப் பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் தமிழ் தரப்புக்களை அழைத்துள்ளமை தொடர்பாகவும் தமிழ் - முஸ்லிம் தரப்புகளுக்கு இடையிலான சுமுகமான பேச்சுகள் முன்னெடுக்கப்படுமா என்பது தொடர்பிலும் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்னைக்கான தீர்வை காண்பதற்காக தமிழ்த் தரப்பை பேச்சுக்கு அழைப்பு விடுத்துள்ளார். அவர் மலையக தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் தரப்புக்களையும் தனித்தனியாக சந்திப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முஸ்லிம் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் தீர்வை காண்பதற்காக இதயசுத்தியுடன் எமக்கு அழைப்பு விடுக்கும் பட்சத்தில் நாம் அதில் பங்கேற்பதற்கு தயாராகவே உள்ளோம். குறிப்பாக, இனப் பிரச்னைக்கு தீர்வுகாண்பதற்கான பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, உள்நாட்டுக்கும் வெளிநாட்டுக்கும் காண்பித்து அதன் ஊடாக தோதல் அரசியல் நன்மைகளை அடைவதற்கான முனைப்பை செய்வது முழுமையாக தவிர்க்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் அனைத்து தரப்பினரும் உறுதியாக இருக்க வேண்டும்.

தற்போது நாடு பொருளாதார ரீதியாக வங்குரோத்து அடைந்துள்ளது. இந்த நிலைமையிலிருந்து நாட்டை முன்னெடுத்துச் செல்வதாக இருந்தால் அனைத்து சமூகங்களினதும் ஒத்துழைப்புக்கள் அவசியமாகின்றது. இந்தப் புரிதல் ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது.

அத்துடன், இனவாதிகளும் அடிப்படைவாதிகளும் தற்போது மௌனித்துப் போயிருக்கின்ற தருணமாகவும் உள்ளது. அத்துடன், கடும்போக்கு அரசியல் வாதிகளையும் ஜனாதிபதியின் தலைமைத்துவமே கையாள்கின்றது.

ஆகவே, தற்போது ஏற்பட்டிருக்கின்ற தருணமானது இனப்பிரச்னையை தீர்ப்பதற்கான மிகப்பொருத்தமானதொரு தருணமாகும் என்றே நாம் கருதுகின்றோம். அவ்வாறான நிலையில் தற்போதைய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நீடித்துக் கொண்டிருக்கும் இப்பிரச்னைக்கு தீர்வு காணப்பட வேண்டும். ஆனால், அண்மைய காலத்தில், இந்த நாட்டில் ஆட்சியைத் தீர்மானிப்பவர்களாக தம்மைக் கருதுகின்ற சிங்கள, பௌத்த அடிப்படைவாதத்தில் மூழ்கிப்போயிருக்கின்ற சில தேரர்களும் அரசியல்வாதிகளும் அவ்வப்போது, கிளர்ந்தெழுகின்ற நிலைமைகள் காணப்படுகின்றது.

இவர்கள் போலியான பிரசாரத்தை முன்னெடுத்து வீணான பிரச்னைகளை மீண்டும் தோற்றுவிப்பதற்கே முயற்சிக்கின்றார்கள். குறிப்பாக, அதியுச்சமான நற்சிந்தனைகளை அருளிய கௌதம புத்த பெருமானை எல்லைக்கற்கள் போன்று பயன்படுத்தி இந்த நாடு பௌத்த நாடு. அது சிங்களப் பெரும்பான்மையினருக்கே சொந்தமானது என்ற தோற்றப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கு முயற்சிக்கப்படுகின்றது.

ஆகவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நல்ல சில விடயங்களை முன்னெடுத்தாலும் இனவாத, அடிப்படைவாத சக்திகள் மீண்டும் பூதாகரமாக தலைதூக்குவதற்கு இடமளிப்பதானது அனைத்தையும் சீர்குலைத்துவிடும். அதுமட்டுமன்றி அவர் மீதான நம்பிக்கையையும் ஏற்படுத்தாது.

ஆகவே, இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு இந்த விடங்களை முளையிலேயே களைந்து விடுவது பொருத்தமானதாகும் - என்றார்.

# 8 பேருக்கு கொரோனா!

கொழும்பு, மே 15

நாட்டில் நேற்று முன்தினம் மேலும் 8 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப் பட்டுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

இதனையடுத்து, இலங்கையில் பதிவான நோயாளர்களின் எண்ணிக்கை 6 இலட்சத்து 72 ஆயிரத்து 283 ஆக உயர்ந்துள்ளது.

இதற்கிடையில், சீரற்ற காலநிலை காரணமாக நாடு முழுவதும் கொரோனா வைரஸ் உட்பட பல வைரஸ்கள் பரவி வருவதாக சுகாதார திணைக்களம் எச்சரித்துள்ளது. (ஐ)

## கொள்கை..

டுகளை மேற்கொள்வதே தேசிய கொள்கை ஆணைக்குழுவின் முதன்மை நோக்கமாக இருக்கும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-சி)

## ஜனாதிபதி...

பகிர்வு தொடர்பாக பேசப்பட வுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெறுவதாக இருந்த இந்தப் பேச்சு, நலன்புரி நன்மைகள் வழங்குவது தொடர்பான சட்டமூலம் குறித்து பாராளுமன்றில் நடந்த வாக்கெடுப்பால் பிற்போடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கஞ்சா பயிர் விரைவில் சட்டபூர்வமாகும்!

கொழும்பு, மே 15

நாட்டில் கஞ்சா பயிர்ச் செய்கையை சட்ட பூர்வமாக்கும் முயற்சியில் அமைச்சரவை ஈடுபட்டுள்ளதாக அறிய வருகின்றது.

அமைச்சரவை வட்டார தகவல்களின்படி, ஏற்றுமதி மற்றும் மருத் துவ நோக்கங்களுக்காக கஞ்சா பயிர்ச் செய்கையை சட்டப்பூர்வமாக் குவது தொடர்பான சிறப்பு அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக் கப்பட்டுள்ளது. இதற்கான அவதானிப்புகளுக்கு அமைச்சரவை அழைப்பு விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான சட்ட ஏற்பாடுகள் தயாரானதும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டு, விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம் பொருத்தமான விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுத்து, கஞ்சாவை பெருமளவில் பயிரிட்டு ஏற்றுமதி செய்யவும் மருந்து உற்பத்திக்கு பயன்படுத்தவும் அமைச்சரவை அனுமதிக்கும்.

எனினும், பயிரிடும் உரிமம் பெற்றவர்கள் மட்டுமே கஞ்சா பயிர்ச் செய்கையை தொடங்க முடியும்.

கஞ்சாவை சட்டப்பூர்வமாக்கும் திட்டம் சில காலமாக விவாதிக்கப்பட்டு வந்தது. இராஜாங்க அமைச்சர் திருமதி டயானா கமகே இது குறித்து கடந்த காலங்களில் பலமாக குரல் எழுப்பி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-சி)

ஈழநாடு
Eelanadu

# கடன்சீரமைப்பு சத்திர சிகிச்சை போன்றது ஒரே தடவையில் சரியாக செய்ய வேண்டும்!

## பொருளியல் நிபுணர்கள் ஆலோசனை

கொழும்பு, மே 15

**சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டுக்கு அமைவாக தேசிய கடன்களை மறுசீரமைப்பது மிகக் கடினமான விடயம் என்று சுட்டிக்காட்டியுள்ள பொருளியல் நிபுணர்கள், இருப்பினும் கடன் மறுசீரமைப்பு என்பது ஒரு சத்திர சிகிச்சையை போன்றது என்றும், அதனை ஒரே முறையில் சரியாக செய்து முடிக்க வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.**

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி செயல் திட்டத்தின் கீழ், சுமார் 300 கோடி டொலர் கடன் உதவியை பெற்றுக் கொள்வதற்கான இறுதிக்கட்ட இணக்கப்பாடு கடந்த மார்ச் எட்டப்பட்ட நிலையில், கடன் மறுசீரமைப்பு குறித்த செயல் திட்டத்தை ஏப்ரல் இறுதிக்குள் வெளியிடுவதற்கு எதிர்பார்த்திருப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இருப்பினும், எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று அந்தச் செயல்திட்டம் கடந்த மாதம் வெளியிடப்படவில்லை. இந்நிலையில், இம்மாத இறுதிக்குள் கடன் மறுசீரமைப்புச் செயல் திட்டம் வெளியிடப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய கடந்த வாரம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் தேசிய கடன் மறுசீரமைப்பு என்பது, மத்திய அரசாங்கத்தின் ஊடாக தேசிய சந்தையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களையே இலங்கை அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியமும் தேசிய கடன்களாக கருதுகிறது என்று தெரிவித்த இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் கலாநிதி டபிள்யூ.ஏ. விஜேவர்தன, இருப்பினும் மத்திய அரசாங்கத்தால் பெறப்பட்ட கடன்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் கடன்கள், அரசாங்கத்துக்குச் சொந்தமான நிறுவனங்களால் பெறப்பட்ட கடன்கள், மத்திய வங்கி உள்ளடங்கலாக அரச வங்கிகள் பெற்ற கடன்கள், அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படும் சமூக பாதுகாப்பு நிதியங்களுக்காக பெறப்பட்ட கடன்கள் மற்றும் அரசாங்கத்தின் பரிந்துரைக்கு அமைய தனியார் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் என அனைத்தையும் அரச கடன்களாகவே கருதவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதுமாத்திரமன்றி, அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்டுள்ள தேசிய வருமானத்துக்கும் உண்மையான வருமானத்துக்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்படுவதாகவும், இவ்வாறானதொரு சூழ்நிலையில் தேசிய கடன்களை மறுசீரமைப்பது கடினமான விடயம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கடன் மறுசீரமைப்பை ஒரு சத்திர சிகிச்சையுடன் ஒப்பிட்டுக் காண்பித்துள்ள அட்வகாட்டா அமைப்பின் பொருளியல் ஆய்வாளர் கனிஷ்க வேரவில, “உயிரை காப்பதற்கு சத்திர சிகிச்சை இன்றியமையாதது என்பதுடன் அதனை ஒரே தடவையில் சரியாகச் செய்துமுடிக்கலாம் எனும்போதுதான் நாம் அந்தத் தெரிவுக்குச் செல்வோம். அதே போன்றுதான் கடன் மறுசீரமைப்பின்றி பொருளாதார ரீதியில் முன்நோக்கிப் பயணிக்க முடியாது என்பதுடன் அதனை ஒரே முறையில் சீராக செய்யமுடியும் எனும்போது அத்தெரிவுக்கு செல்லவேண்டும்” என்று சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)



# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஊர்தி கிளிநொச்சியை அடைந்தது

கிளிநொச்சி, மே 15

முள்ளிவாய்க்காலை நினைவேந்தும் விதமாக ஆரம்பிக்கப்பட்ட வாகன ஊர்தி நேற்று கிளிநொச்சியை வந்ததடைந்தது.

முள்ளிவாய்க்காலில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த ஊர்தி பயணம் வவுனியா, மன்னார், மல்லாவி ஊடாக பயணித்து மூன்றாம் நாளான நேற்று கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடு சந்தியில் நிறைவடைந்தது.

இந்தி ஊர்தியின் நான்காம் நாள் பயணம் இன்று காலை இரணைமடு சந்தியிலிருந்து ஆரம்பித்து பூநகரி ஊடாக யாழ்ப்பாணத்தை அடையும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஊர்தியை வரவேற்கும் வகையில் “கிளிநொச்சி இளைஞர்கள் நாம்”, எனும் அமைப்பு இரணைமடு சந்தியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வை நேற்று ஏற்பாடு செய்திருந்தது. (ஐ)

# 430 அரச நிறுவனங்களை விற்க, மறுசீரமைக்க முடிவு

## இந்த ஆண்டுக்குள் நடவடிக்கை

கொழும்பு, மே 15

இலங்கையில் சுமார் 430 அரச நிறுவனங்கள் விற்பனை செய்யப்படவுள்ளன அல்லது மறுசீரமைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செயல்முறைகள் இரண்டு மாதங்களுக்குள் ஆரம்பித்து இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் நிதி அமைச்சு, இந்த 430 அரச நிறுவனங்களை, நஷ்டம் மற்றும் இலாபம் ஈட்டும் நிறுவனங்களை, உத்தேச மறுசீரமைப்பு செயல்முறைக்காக அடையாளம் கண்டுள்ளது.

முன்மொழியப்பட்ட திட்டத்தின் கீழ், சில நிறுவனங்கள் விற்கப்படும் சில நிறுவனங்கள் மூடப்படும் அல்லது இணைக்கப்படும் அல்லது மறுகட்டமைக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

430 நிறுவனங்களில் 39 கூட்டுத்தாபனங்கள் 218 நிறுவனங்கள் மற்றும் 173 சட்டபூர்வ சபைகள் உள்ளன. நிறுவனங்களில் 21 பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்களும் அடங்குகின்றன.

மதிப்பீடுகளின்படி, கடந்த ஆண்டு, இலங்கை கனியவள கூட்டுதாபனம் 615 பில்லியன் ரூபாயையும், இலங்கை மின்சார சபை 272 பில்லியன் ரூபாயையும் சிறீலங்கன் விமான சேவை 7,000 கோடி ரூபாயையும், வரையறுக்கப்பட்ட கப்பல்துறை கூட்டுத்தாபனம் 400 கோடி ரூபாயையும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால சபை 300 கோடி ரூபாயையும், தேசிய வீடமைப்பு மேம்பாட்டு ஆணைக்குழு 100 கோடி ரூபாயையும் நட்டமாக பதிவுசெய்துள்ளன.

இதனை தவிர அரச பொறியியல் கூட்டுத்தாபனம், ஹோட்டல் டெவலப்பர்ஸ் லங்கா தனியார் நிறுவனம், லங்கா சதோச நிறுவனம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், மைக்ரோ லிமிடெட், அரச அச்சகக் கூட்டுத்தாபனம், ஐ. ரி. என்., தேயிலை சிறு தோட்ட அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், தேசிய கால்நடை அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வரையறுக்கப்பட்ட லங்கா லேலண்ட் என்பனவும் நட்டமடைந்துள்ளன.

இந்தநிலையில் குறித்த நிறுவனங்களின் மறுசீரமைப்பு செயல்முறையை மேற்கொள்வதற்காக நிதி அமைச்சகத்தில் பொது தனியார் கூட்டாண்மைக்கான தேசிய நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது. (ஐ)

# ரணில் ஜனாதிபதி, பஸில் பிரதமர் இதுவே பெரமுன கட்சியின் திட்டம்

## அத்துரலிய ரத்ன தேரர்

கொழும்பு, மே 15

2024ஆம் ஆண்டு ரணில் ஜனாதிபதி, பஸில் ராஜபக்ஷ பிரதமர் என்ற நிலைப்பாட்டுக்குள் இருந்து கொண்டு சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான தரப்பினர் செயல்படுகிறார்கள். இந்த இருவரின் ஆட்சியை நாட்டு மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள போவதில்லை என்று பாராளுமன்ற உறுப்பினருமான அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

நேற்று செய்தியாளர்களை சந்தித்த அவர், பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்த போது எவரும் அரசாங்கத்தை ஏற்க முன்வரவில்லை என ஆளும் தரப்பினர் குறிப்பிடுவது அடிப்படையற்றது.

நாட்டு மக்கள் ராஜபக்ஷர்களை முழுமையாக புறக்கணித்த பின்னணியில் ராஜபக்ஷர்களை பாதுகாப்பதற்காக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

மக்களால் கடுமையாக வெறுக்கப்பட்ட ராஜபக்ஷர்கள் மீண்டும் மக்கள் மத்தியில் செல்வதற்கான பாதுகாப்பான சூழலை ஜனாதிபதி ஏற்படுத்தி கொடுத்துள்ளார். எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேசிய தேர்தல் தொடர்பில் ராஜபக்ஷ குடும்பத்துக்குள் நான்கு வேறுபட்ட நிலைப்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன.

முதலாவது தரப்பினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இரண்டாவது தரப்பினர் பஸில் ராஜபக்ஷவுக்கும், மூன்றாவது தரப்பினர் நாமல் ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷவுக்கும் நான்காவது தரப்பினர் பஸில் ராஜபக்ஷ உட்பட நாமல் ராஜபக்ஷவுக்கு ஆதரவாக செயல்பாடும் நிலைப்பாட்டில் உள்ளார்கள்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி, சிறீ லங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகள் ஒன்றிணைந்து பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை களமிறக்கவும் அதே ஆண்டு இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் பஸில் ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக களமிறக்கவும் பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள் - என்றார். (ஐ)

# தொடர்ச்சியாக பெய்த மழையால் 3 மாவட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கின

கொழும்பு, மே 15

நேற்று மாலை வரையான 24 மணி நேரம் காலி, அம்பாந்தோட்டை, களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் பல பிரதேச செயலகங்களில் பெய்த கடும் மழையால் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

பல பிரதான வீதிகள் மற்றும் பல தாழ்நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. சில இடங்களில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இன்றும் தென் மாகாணத்திலும் இரத்தினபுரி மாவட்டத்திலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிக பலத்த மழைவீழ்ச்சி பெய்யக் கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ஐ)

# உச்சமடையும் டெங்கு நோய் கட்டுப்படுத்த விசேட கூட்டம்!

கொழும்பு, மே 15

கண்டி, குருநாகல், காலி, கேகாலை ஆகிய மாவட்டங்கள் மற்றும் மேல் மாகாணத்தில் டெங்கு நோயாளர்கள் பதிவாகும் வீதம் அதிகரித்து செல்வதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

மழையுடனான வானிலையுடன் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் ஆணையாளர் மருத்துவர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, டெங்கு அபாய நிலை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்நிலையில், மேல் மாகாணத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளதாக டெங்கு ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாண ஆளுநரின் தலைமையில் இந்த கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

நாட்டில் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு காய்ச்சலால் 18 பேர் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.